Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும், உறுதி மிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக்கணேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 2486

இல.91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி கொக்குவில்.
இல,80 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு :2035 புரட்டாதி 14 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 14 (30.09.2004) வியாழக்கிழமை இதழ்:364

# சமாதானத்தின் எதிரியான நோர்வேயை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்!

## போராட்டத்தில் குதிக்கிறது ஹெலஉறுமய

(கொழும்பு)

**இலங்கையின் உண்மையான எதிரிகள் நோர்வே தூதுவர்களே. புலிகள் மீது அனுதாபம் காட்டும் நோர்வே நாட்டவர் சமாதான முயற்சிகளில் தலையிடுவதைக் கைவிட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று கோரி ஜாதிக ஹெலஉறுமய தொடர் போராட்டங்களை நடத் துவதற்குத் தீர்மானித்துள்ளது. சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேக்கு எதிரான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி நேற்றுமுன்தினம் கண்டி மத்திய சந்தையில் நடந்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.**

சிங்களத் தேசிய அடிப்படைவாத பௌத்த துறவிகளைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய கட்சி ஒழுங்குசெய்த இந்தக் கூட்டத்தில் - ஏராளமான இனவாதப் போக்கு டைய பிரமுகர்களும் கலந்துகொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்ததாகத் தெரியவருகிறது. .

இந்தக் கூட்டத்தில் - இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுவதை நோர்வே முற்றாகத் தவிர்த்துக்கொண்டு இலங்கையை விட்டு வெளியேறவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அனுசரணையாளராக நோர்வே செயற்படுவதை மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த 5 மில்லி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதாவுல்லா ஆதரவாளர் துப்பாக்கிச்சூட்டில் காயம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் ஆயுதக்குழுவொன்றினால் சுடப்பட்டு, காயமடைந்த நிலையில் அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்துல் ரசாக் மொஹமட் அஸ்லாம் என்ற பெயருடைய 27 வயதான இந்த நபர், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சருமான ஏ.எல்.அதாவுல்லாவின் தீவிர ஆதரவாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிராயுதபாணிகளின் கொலை இனியும் பொறுக்க முடியாது!



### ஜனாதிபதி சந்திரிகா சீற்றம்

(கொழும்பு)

அரசியல் கட்சிகளின் நிராயுதபாணி உறுப்பினர்கள் கொல்லப்படுவதை இனியும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யுத்த நிறுத்தம் ஏற்பட்டதன் பின்னர் - விடுதலைப் புலிகள் ...ர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் யாவும் நிராயுதபாணிகளாக்கப்பட்டுள்ளன. இந்தக் ...் உறுப்பினர்கள் கொல்லப்படுவது மனிதாபிமானமற்ற செயல். இதனைத் தொடர்ந்தும் ...்பெற அனுமதிக்க முடியாது.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பாதுகாப்புக்கோரிநின்ற சகல தமிழ் அரசியல்வாதி ...க்கும் அதிகூடிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு இரண்டாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

நான்கு வர்ணங்களில் | 60 இற்கும் மேற்பட்ட பக்கங்களுடன் | வெள்ளியன்று [01-10-2004]

வெளிவருகிறது! விலை ரூபா 10/= மட்டுமே

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

## புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைப்படி பேச்சுக்கள் ஆரம்பிக்காவிடின் தொடர் போராட்டம் நடத்தப்படும்!

ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டாலும்

## ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டாலும்

# இலங்கை விவகாரம் தொடர்பான அமெரிக்கக் கொள்கை மாறாது!

அமெரிக்காவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டா ... இலங்கை விவகாரத்தில் குறிப்பிடத் ...க மாற்றம் எதுவும் ஏற்படாது என அமெ ...க பல்கலைக்கழகம் ஒன்றின் பேராசிரியர் ...ளைட் வில்கொக்ஸ் தெரிவித்தார்.

அமெரிக்க நிலையத்தில் நடைபெற்ற செய்மதி வலையமைப்பின் ஊடான கருத்துப் பகிர்வின்போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கையின் அழைக்கப்பட்ட ஊடக வியலாளர்களுக்கு அமெரிக்காவில் இருந்து பேராசிரியர் கிளைட் கருத்துப் பகிர்வு மேற் கொண்டார்.

இதன்போது - அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் இலங்கை விவகாரம் குறித்த விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுமா எனக் கேட்கப்பட்டபோது, அதற்கு பதில ளித்த அவர், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன்ஹெரி வெற்றிபெற்றால் தற்போதுள்ள இலங்கை தொடர்பான அணுகுமுறைகளில் குறிப்பிடத்தக்க அளவுமாற்றங்களை ஏற் படுத்துவார் என்று கருதிவிடமுடியாது.. தற்போதுள்ள அமெரிக்க அணுகுமுறையையே அவர் தொடர்வார் என்று கூறினார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வெற்றி பெற்றாலும் தற்போதைய நிலையே தொட ரும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(01)

## ...மெரிக்கத் தூதுவரை ...ட்டமைப்பு எம்.பிக்கள் ...ன்று சந்திக்கவுள்ளனர்!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளு ...ன்ற உறுப்பினர்கள் இன்று அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லங்ஸ்ரீட்டை கொழும் பிலுள்ள தூதரகத்தில் சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்கத் தூதரைச் சந்திக்கும் இந் தக் குழுவினர் - விடுதலைப் புலிகளுடனான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விக்கிரமபாகு கருணாரட்ன அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக் கால நிர்வாகசபை யோசனையை அடிப்படை யாகக் கொண்டு அரசாங்கம் பேச்சுக்களை நடத்தவேண்டும். இல்லையேல் தொடர் போராட்டங்களை நடத்தப்போவதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரம பாகு கருணாரட்ண எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவி யலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர் வாக யோசனையை அடிப்படையாகக் கொண்டு அரசு பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.

பொருட்களின் விலை அதிகரிப்பு கட்டுப் படுத்தப்படவேண்டும். அரச ஊழியரின் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும் முதலான கோரிக்கைகளைத் தற்போது நாம் அரசாங்கத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள இனத்தவர் இரண்டு பேர் அம்பாறையில் சுட்டுக்கொலை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் - தீகவாவி பிரதே சத்தில், நேற்றுமுன்தினம் இரவு சிங்கள இனத்தவர் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் தீகவாவியைச் சேர்ந்த சமந்த லால் விஜயதிலக்க (வயது- 34) மற்றும் கருணா பொடியாகே குலரத்தின (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதி அபிவிருத்தி ஒப்பந்தகாரர்களான இவர்கள் இருவரும், மோட்டார் சைக்களில் அம்பா றைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இருவரது சடலங்களையும், நேற்றுக் காலை உகனை பொலிஸார் தீகவாவி ஒலு வில் வீதியிலுள்ள முள்ளிக்குளம் சந்தியில் கண்டெடுத்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# ஆய்வுப்பயிற்சி கற்கைநெறி

## சமாதானமும் அபிவிருத்திக்குமான கற்கை:கோளம் தழுவிய உள்ளூர் அபிவிருத்தி

**Research Training Course**
**Peace and Development Studies : Local Development In Global Context**
**(Monday 14 Nov to Friday 18 Nov 2004)**

நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக்கழக சமூகவியல், புவியியல்துறையும் மற்றும் நோர்வே, விவசாயப் பல்கலைக்கழகமும், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையுடன் இணைந்து மேற்குறிப்பிட்ட கற்கைநெறி ஒன்றினை புவியியற்துறையில் நடாத்தத் தீர்மானித்துள்ளது.
இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து 31.10.2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### *அனுமதிக்கான தகைமை*

பின்வரும் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்தவர்கள் கற்கை நெறிக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞான கற்கைநெறிகளில் யாதேனும் ஒன்றில் பட்டம் பெற்றுள்ளவர்கள்.
2. பின்வரும் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுள் ஏதேனும் ஒன்றில் குறைந்த பட்சம் 5 வருட கால அனுபவம் கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் பதவி வகிப்போர். திட்டமிடல் பிரிவுகள், கல்வி, விவசாயம் கடற்தொழில் கைத்தொழில் ஆகிய திணைக்களங்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்.
3. கற்கை நெறிக்காலம் ஒரு வாரம் (14.11.2004-18.11.2004)
4. விரிவுரைகள் வார நாளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை.
5. கற்கை நெறிக்கு 40 மணவர்கள் அனுதிக்கப்படுவர்.
6. போதனாமொழி - தமிழ்/ஆங்கிலம்.
7. பயிற்சி - இலவசம்.
8. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து பதிவுத்தபாலில், அத்துடன் முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட 23x10 செ.மீ அளவிலான தபால் உறை ஒன்றையும் இணைத்து 31.10.2004க்கு முன் தலைவர் புவியியல் துறை யாழ்.பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

கலாநிதி.ஏ.எஸ்.சூசை,
கற்கை நெறி இணைப்பாளர்,
புவியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

பேராசிரியர் கா.குகபாலன்,
தலைவர்,
புவியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/948)

**நிரஞ்சனாஸ்** சங்கானை



தனுஸ், சிந்துலானி கருணாஸ் மற்றும் மணிவண்ணன்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**Return to two moon junction**

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு



அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

**அரசாட்சி**

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

(சி-2725)

# கூறுவிலை கோரல்

இலங்கை மின்சாரசபை பிரதிப் பொதுமுகாமையாளர் வட மாகாண அலுவலகத்துக்கு கீழ்க்குறிப்பிடப்படும் வசதிகளுடைய ஓர் கட்டடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

01. 1700 சதுர மீற்றர் கட்டட நில விஸ்தீரணம் உடையதாக இருத்தல் வேண்டும்.
02. யாழ்.மாநகர கால எல்லைக்குள் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
03. நீர் வசதியுள்ளதாக 50 பேர் பாவனை செய்யக்கூடிய மலசலகூட வசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.
04. சுமாராக 15 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடியதான இடவசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.
05. குறைந்தது 5 வருடங்கள் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளையுடைய கட்டட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளைப் பதிவு செய்யப்பட்ட காணி உறுதிப்பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 04.10.2004க்கு முன்னதாகக் கிடைக்கும்படி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர்,
(வடக்கு) அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021.222 2496

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கைமின்சாரசபை

(C/3211)

# வடமராட்சி மக்களுக்கு சேவைபுரிய

## (30.09.2004) இன்று தொடக்கம்

## இல 30, பிரதான வீதி, நெல்லியடியில்.

# HNB ஹற்றன் நஷனல் வங்கி

வாடிக்கையாளர் நிலையம்



# கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகிறது

# அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

# வயிற்றுக்குள் ஹெரோயின் கடத்திய பாகிஸ்தானியர்கள்!

## கட்டுநாயக்கவில் பிடிபட்டனர்

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருட்களை வயிற்றுக்குள் கடத்தி வந்த இரண்டு பாகிஸ்தானியப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பாகிஸ்தானில் இருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இரண்டு பாகிஸ்தானியப் பிரஜைகள் மீது சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவர்களைச் சோதனையிட்டனர்.

குறிப்பிட்ட இருவரையும் ஸ்கானிங் சோதனைக்குட்படுத்தியபோது, இருவரினதும் வயிற்றுக்குள் சந்தேகத்துக்கு இடமான வில்லைகள் பெருமளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இருவரும் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு-அவர்களின் கண்காணிப்பின் கீழ் வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்த அறுவைச் சிகிச்சை மூலமாக இருவரது வயிற்றில் இருந்தும் 151 ஹெரோயின் மாத்திரைகள் மீட்கப்பட்டன.

# புலிகளின் இடைக்கால யோசனையை எதிர்த்து பிக்குமார் ஒன்றியம் கொழும்பில் பாதயாத்திரை!

## ஒக்ரோபர் 5 இல் நடைபெறும்

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை ஆட்சேபித்து அனைத்து பல்கலைக்கழக பிக்குமார் ஒன்றியம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி கொழும்பில் பாதயாத்திரை ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப் பாதயாத்திரை ஆரம்பமாவதற்கு முன்னர் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையிலுள்ள தீமைகள் குறித்து கருத்தரங்கொன்றையும் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக அனைத்து பல்கலைக்கழக பிக்குமார் ஒன்றியத்தினர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் -

போர்நிறுத்த உடன்படிக்கையினூடாக தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பலத்தை மேலும் அதிகரித்துள்ளதுடன், ஈ.பி.டி.பி மற்றும் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரையும் கொலை செய்கின்றனர்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு சம அந்தஸ்து வழங்குவதாக விடுதலைப் புலிகள் கூறினாலும், ஆட்சி - அதிகாரம் கிடைத்த பின்னர் புலிகளே ஏகாதிபத்திய ஆட்சியை நடத்துவார்கள்.

இடைக்கால யோசனையின் படி 5 வருடங்களுக்கு விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் ஆட்சி செய்வதுடன், அக்காலப்பகுதியில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசுடன் இணக்கத்துக்கு வரவில்லையானால் வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்துவார்கள்.

இதன் மூலம் தமது தன்னாட்சி கோரிக்கைக்கு வலிமை சேர்ப்பார்கள். இதுவே புலிகள் இடைக்கால தன்னாட்சியைக் கோருவதன் உள் நோக்கமாகும்.

புலிகள் முன்வைத்துள்ள யோசனையின்படி நிதி குறித்த அனைத்து நடவடிக்கைகளும் விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்படும். புலிகள் தரப்பு கணக்காளரே அனைத்து விபரங்களையும் மேற்பார்வை செய்வார்.

மேலும் புலிகள் வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து காணிகளுக்கான உரிமைகளையும் தமதாக்கிக் கொள்வார்கள். இதன் மூலம் போர்க் காலத்தில் இங்கிருந்து இடம் பெயர்ந்து பிற மாவட்டங்களுக்குச் சென்ற சிங்கள முஸ்லிம் மக்களுக்குரிய காணிகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போகலாம்.

அனைத்து இயற்கை வளங்களும் வடக்கு - கிழக்கிலேயே காணபடுகின்றன. அதாவது கனிய வளங்கள், துறைமுகங்கள், பிரசித்தி பெற்ற விகாரைகள், கோவில்கள் காணப்படுகின்றன. தன்னாட்சி அதிகாரசபை மூலம் இவற்றை நாம் இழக்க நேரிடும்.

நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள முன்வரவேண்டுமே தவிர, தன்னாட்சி அதிகாரசபை யோசைனை ஊடாக நிபந்தனைகளை முன்வைப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ஜே.வி.பியுடன் இணைந்து நாட்டைப் பாதாளத்தில் தள்ளுகிறார்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் குற்றச்சாட்டு



அரசாங்கத்தில் இருந்தே ஜே.வி.பி தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

மொரட்டுவையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த வருடம் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவானதன் பின்னர் நாட்டில் உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்தி, ஏற்கனவே ஐ.தே.க அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியின் படி, மூன்றாம் ஆண்டுக்கான அபிவிருத்தியை மேற்கொள்ளவிருக்கிறேன்.

கடந்த ஆட்சியில் வரி மன்னிப்பு சட்டத்தைக் கொண்டு வந்தபோது நாட்டில் உள்ள கறுப்புப் பணத்தை வெளிக்கொணர்வதே நோக்கமாக இருந்தது. இந்தநிலையில் அரசாங்கத்தின் வரி மன்னிப்பு திருத்த சட்டமூலத்தை நாம் எதிர்க்கவில்லை.

அரசாங்கம் இந்த சட்டத்தின் மூலம் பெறும் 20 ஆயிரம் கோடி ரூபாவின் மூலம் நாட்டின் பட்டதாரிகளுக்கும் அரசாங்கம் ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வையும் தாம் வாக்குறுதி வழங்கியபடி வழங்கவேண்டும்.

ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் எமக்கு பிரச்சினைகளைக் கொடுத்து வந்தனர்.

இன்று ஜனாதிபதியும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பியின், விமல் வீரவன்சவும் இணைந்து நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளிவிட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லும்.

நாட்டில் அமைதியையும், அபிவிருத்தியையும் கொண்டுவர மக்கள் இரண்டு வருடங்களுக்கு மாத்திரம் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் நாம் இதைக் கூறியபோது மக்கள் எம்மை தூற்றினர். இன்று இந்த உண்மையை அவர்கள் உணர்கின்றனர்.

நடைமுறையில் அரசாங்க பங்காளியாக இருந்தாலும், ஜே.வி.பி பொருட்களின் விலையுயர்வு விடயத்தில் தமக்குப் பொறுப்பில்லை எனக் காட்ட முனைகிறது.

அரசாங்கம் தற்சமயம் இடைக்கால நிர்வாக அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என அவர் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார். (01)

# நல்லிணக்க சபைக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பங்கேற்குமாம்

சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அமைக்கப்படவுள்ள தேசிய நல்லிணக்க சபையின் முதலாவது பேச்சுவார்த்தையில் பங்குபற்றியதன் பின்னர் எதிர்வரும் காலத்திலும் அந்த சபையில் பிரதிநிதித்துவம் வகிப்பதா என்று தீர்மானிப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது.

இதன்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது கட்சிக்கு விடுத்துள்ள அழைப்பை ஏற்று தேசிய நல்லிணக்க சபையின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்வதற்கு தமது கட்சி தீர்மானித்துள்ளதாக, அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள இந்தக் கலந்துரையாடலில் என்ன நடக்கப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகள் பங்குபற்றும். பேச்சுவார்த்தையின் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றைய குழுக்களுடனும் கலந்துரையாடிய பின்பே நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை பொலிஸாருக்கு அமெரிக்கா பயிற்சி!

நவீன ஆயுதங்களைக் கையாள்வது தொடர்பான பயிற்சிகளை அமெரிக்கப் பொலிஸார் வெகு விரைவில் இலங்கைப் பொலிஸாருக்கு வழங்கவுள்ளனர்.

இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவும், அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி ஜே லங்ஸ்ரீட்டும் கைச்சாத்திட்டனர்.

இரண்டு வருட காலத்தைக் கொண்ட இந்தச் செயற்திட்டத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன.

சர்வதேச குற்ற விசாரணைப் பயிற்சி உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பயிற்சிகளை அமெரிக்க நீதித் திணைக்களமே நிர்வகிக்கும்.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கான பொலிஸார் பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

# அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது

## ஐ.தே.கட்சி அறிவிப்பு

தேர்தல்களில் தேசிய அடையாள அடைகளை வாக்காளர்கள் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நகல் சட்டமூலம் இலங்கையின் அரசியல் யாப்புக்கு முரணானது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசியல் யாப்பு 89-101 ஆம் வாசகங்களின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டுள்ள மக்களின் உரிமையைப் பறிப்பதாக இச்சட்டமூலம் அமைந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாக்காளர்களில் சுமார் 30 வீதத்தினர் தேசிய அடையாள அட்டைகளைக் கொண்டிருக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் தேர்தலில் இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைகள் மறுக்கப்படும். தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துவதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதையே எதிர்க்கிறோம்.

ஆட்பதிவுத் திணைக்களம் ஓராண்டு காலத்துக்குள் சகல வாக்காளர்களுக்கும் அடையாள அட்டையை விநியோகிக்கும் நிலையில் இல்லை. தேர்தல் ஆணைக்குழுவை அமைப்பதற்கு அல்லது இதற்கமைய அரசியலமைப்பைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால், ஐக்கிய தேசியக் கட்சி இந்தச் சட்டமூலத்தை எதிர்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் இடைக்கால யோசனை தனித் தமிழீழத்தின் உறுதிப்பத்திரமே

## விமல் வீரவன்ச கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை யோசனை தமிழீழ ராஜ்ஜியத்தின் உறுதிப்பத்திரமே. அப்படிப்பட்ட உறுதிப்பத்திரத்தில் ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட இருந்தவேளை, அதிர்ஷ்டவசமாக நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றி இக்கட்டான நிலைக்குள்ளிருந்து நாட்டை மீட்டெடுத்துவிட்டோம் என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமையன்று சுகததாஸ விளையாட்டரங்கில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நடத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதில் தொடர்ந்து உரையாற்றிய அவர் -

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிக்குப் போன பின்னர் வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து நாட்டைப் பிரிக்க முயல்கிறார். அதனை முறியடிக்க நாம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

இடைக்கால நிர்வாகசபை யோசனை விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

நோர்வேக்கும் - புலிகளுக்கும் இடையே இருக்கின்ற தொடர்புகள் தற்போது தெளிவாகத் தெரிகிறது. நாம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் எமது அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டதன்மூலம், புலிகளுக்கெனத் தனியான பிரதேசமொன்றை அங்கீகரித்துள்ளார்.

அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பிரதேசத்துக்குள் இராணுவத்தினர் சீருடையுடன் போகமுடியாது. கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தின்போது - நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. புலிகளுக்கெனத் தனியான ஈழத்தைப் பெற்றுக் கொடுப்பதில் அவர்களுக்கு அப்படியொரு விருப்பம் இருந்தது. நாட்டில் வாழும் அனைத்து இன மக்களையும் பிரித்து நாட்டை முற்றாக அழித்து விடுவதற்கே ஐக்கிய தேசியக் கட்சி முயன்றது.

ஜனாதிபதி ஐ.நா பொதுக்கூட்டத்தில் புலிகள்தான் பேச்சுவார்த்தைக்கு வரமறுக்கின்றனர் எனக் குறிப்பிட்டார். உடனே தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அதை எதிர்த்து அறிக்கை விட்டனர். மறுநாள் அதையொத்த அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியும் விட்டது.

நாட்டில் பற்று இல்லாதவர்களே இவ்வாறான அறிக்கையை விடுகின்றனர். ஐ.தே.கட்சியால் நாட்டையும் காப்பாற்றமுடியாது, நம் இனத்தையும் காப்பாற்றமுடியாது.

அதுமட்டுமன்றி, அடிமைவாதிகளுக்கு அடகு வைப்பதற்கும் கடும் முயற்சிகளை மேற்கொண்டது. புலிகளுக்கு வக்காலத்து வாங்குவதிலேயே ரணில் விக்கிரமசிங்க காலத்தைக் கழிக்கிறார்.



முதற்தடவையாக உலக வங்கியின் நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டு தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வரவு - செலவுத் திட்டம் ஒன்றை எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

அமெரிக்காவின் பொருளாதாரக் கொள்கைக்கு அமைவான வரவு - செலவுத் திட்டம் இனியும் தயாரிக்கப்படாது. தேசிய பொருளாதார வளர்ச்சியில் நாம் அவ்வளவு அக்கறையாகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### வலுவிழந்தோர் ஒலிம்பிக்

# போட்டியில் பங்கேற்கச் சென்ற ஏழு குழந்தைகள் மரணம்!

(ஏதென்ஸ்)

வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கச்சென்ற கிரீஸ் பாடசாலைக் குழந்தைகள் 7 பேர் திங்கட்கிழமை நடைபெற்ற கார் விபத்தில் உயிரிழந்தனர்.

இதையடுத்து நிறைவுவிழா கொண்டாட்டங்களை ஏதென்ஸ் போட்டி அமைப்புக்குழு குறைத்துக்கொண்டது.

போட்டியில் பங்கேற்க பஸ்ஸில் சென்ற பள்ளிக் குழந்தைகள் ஏதென்ஸ் அருகே திங்கட்கிழமை விபத்தில் சிக்கியதில் 7 குழந்தைகள் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ள போட்டி அமைப்புக்குழு, அந்த துக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக நிறைவு விழா கலை நிகழ்ச்சிகளை குறைத்துக் கொண்டுள்ளது. குழந்தைகள் இறந்த துயரத்தை வெளிப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகள் மாற்றியமைக்கப்படும். வானவேடிக்கைகள் அனைத்தும் ரத்துசெய்யப்பட்டதாக சர்வதேச ஒலிம்பிக் சபை செய்தித் தொடர்பாளர் மிரியம் வில் கென்ஸ் தெரிவித்தார்.

### வலுவிழந்தோர் ஒலிம்பிக்கில்

# ஊக்க மருந்து பாவனை நிரூபிப்பு; மூவரின் பதக்கங்கள் பறிக்கப்பட்டன!

(ஏதென்ஸ்)

பரா ஒலிம்பிக் போட்டியில் ஊக்கமருந்து பயன்படுத்தியதற்காக மூன்றுபேரின் பதக்கம் பறிக்கப்பட்டது.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் உடல் ஊனமுற்றோருக்கான பரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. இதில் நான்கு வீரர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து உட்கொண்டது நேற்றுமுன்தினம் நிரூபிக்கப்பட்டது.

இந்தசோதனையில் சிக்கியுள்ள பளுதூக்குதலில் வெண்கலம் வென்ற ஈரானின் அலி ஹுசேனி (60 கி.கி), சிரியாவின் யூனிஸ் (56 கி.கி) இருவரதும் பதக்கங்கள் பறிக்கப்பட்டன. மற்றொரு பளுதூக்கல் வீரரான எஸ்தோனியாவின், அலெக்சாண்டர் சோதனையில் சிக்கியுள்ளார். இவர்கள் இரண்டு ஆண்டுகள் சர்வதேச தொடர்களில் பங்கேற்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தவிர சைக்கிள் ரேசில், வெள்ளி வென்ற ஸ்லோவாக்கியாவின் ஜுராஜ் பெட்ரோவிக்கின் பதக்கமும் பறிக்கப்பட்டது.

## சிம்பாப்வே சுற்றுப் பயணத்திலிருந்து இங்கிலாந்து வீரர்கள் பலர் விலகல்



(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் பயணத்திலிருந்து முன்னணி இங்கிலாந்து வீரர்கள் பலரும்விலக முடிவு செய்திருக்கிறார்கள்.

வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவ் ஹர்மிசன் ஏற்கனவே அணியில் இருந்து விலகிவிட்டார். இதற்கிடையே பிளின்ரொப், கைல்ஸ் மற்றும் டிரெஸ்கோதிக் ஆகியோரும் அணியில் இருந்து விலக முடிவுசெய்திருக்கிறார்கள். முன்னணி வீரர்கள் பலரும் விலகி வருவதால் இளம் வீரர்களுக்கு சிம்பாப்வே பயணத்தின்போது, வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று தெரிகிறது. சிம்பாப்வே நாட்டில் அரசியல் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் முன்னணி ஆட்டக்காரர்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

# இந்தியாவுக்கு எதிரான தொடரில் ஷேன்வோன் விஸ்வரூபம் எடுப்பார்

## அவுஸ்ரேலிய பயிற்சியாளர் நம்பிக்கை

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித்தொடரில் அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோன் விஸ்வரூபம் எடுப்பார் என்று பயிற்சியாளர் ஜான் புச்சனன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். 4 டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்காக அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்தள்ளது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஷேன்வோன் இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக பந்து வீசுவார் என்று அணியின் பயிற்சியாளர் ஜோன் புச்சனன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது-

2001 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணி இந்தியாவுக்கு வந்தபோது, ஷேன்வோனுக்கு அதிகளவில் நெருக்கடி இருந்தது. சிறப்பாக பந்து வீசி விக்கெட்டை கைப்பற்றவும் வேண்டும் அதே நேரத்தில் அதிக ரன்களை விடடுக்கொடுக்காமலும் இருக்கவேண்டும் என்ற நிலை இருந்தது.

ஆனால் தற்போது அந்த நிலை இல்லை ஏனெனில் அவுஸ்ரேலிய அணியில் பல முன்னணி பந்து வீச்சாளர்கள் இடம்பெற்று உள்ளனர் என்பதுதான் அதற்கு காரணம் ஆகும்.

எனவே, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வோன் எந்தவிதமான நெருக்கடியுமின்றி விஸ்வரூபம் எடுத்து பந்துவீசுவதுடன் அதிக அளவில் விக்கெட்டுக்களையும் கைப்பற்றுவார் என்ற நம்பிக்கையுள்ளது.

மேலும் 2001 சுற்றுப் பயணத்தின்போது வோன் முழு உடல் தகுதியுடன் இல்லை. ஆனால் தற்போது அவர் நல்ல நிலையிலுள்ளார்.



போதை மருந்து பயன்படுத்தியது கண்டு பிடக்கப்பட்டதை தொடர்ந்து பாதிக்கப்பட்ட ஒரு ஆண்டு தடைக்கு பின்னர் களம் புகுந்த வோன் தற்போது சிறப்பாக பந்து வீசி வருகிறார் இலங்கைக்கு எதிராக அவர் 3 டெஸ்ட் போட்டிகளில் பந்து வீசி 26 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராகவும் வோன் சிறப்பாக பந்து வீசுவார் என்பதற்கு இது ஒரு முன் உதாரணம் ஆகும்.

இவ்வாறு ஜோன் புச்சனன் கூறினார்.

# சிங்கப்பூர் தடகளப் போட்டி அஞ்சு தங்கம் வென்றார்!



சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய அனைத்து நட்சத்திர தடகளப் போட்டியில் நீளம் தாண்டும் பிரிவில் இந்திய வீராங்கனை அஞ்சு ஜோஜ் தங்கம் வென்றார்.

சிங்கப்பூர் போட்டியில் அஞ்சு 6.66 மீற்றர் பாய்ந்து எளிதாக தங்கப்பதக்கம் வென்றார். கஸகஸ்தானைச் சேர்ந்த யெலீனா கொச்யேவா வெள்ளியைப் பெற்றார். (6.41 மீ) 3 ஆவது இடத்தை பிலிப்பினோ டாரஸ் பெற்றார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் போட்டிகளில் நான் சாதனை படைப்பேன் என்று அஞ்சு தெரிவித்தார். அடுத்த ஆண்டு ஹெய்சிங்கியில் உலக தடகளப் போட்டி நடைபெறவுள்ளது.

கஸகஸ்தானைச் சேர்ந்த ஜென்னடி செர்னோவாஸ் மற்றும் சீனாவைச் சேர்ந்த நி.ஜியாஒலி ஆகியோர் முறையே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 100 மீற்றர் போட்டியில் தங்கம் வென்றனர்.

தவிர ஆண்களுக்கான தட்டு எறியும் பிரிவில் சீனவீரர் முடாவோவும் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டும் போட்டியில் கஸகஸ்தான் வீரர் ஜெஸ்ஜெனி மெலாஷென்கோவும் மகளிருக்கான 1500 மீ போட்டியில் கிர்க்கிஸ்தானைச் சேர்ந்த டாடியனோ போரிசொலாவும் தங்கம் வென்றனர்.

# மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு தாயகத்தில் உற்சாக வரவேற்பு



நடந்து முடிந்த மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு வெற்றிபெற்று சாதனை படைத்தது. கடந்த 79 ஆம் ஆண்டு உலகக் கிண்ண வெற்றிக்குப் பின்னர் மேற்கிந்தியத்தீவு சர்வதேச அளவில் பெற்ற முக்கியமான வெற்றி இதுவாகும்.

மினி உலக கிண்ணத்துடன் தாயகம் திரும்பிய மேற்கிந்தியதீவு அணி வீரர்களுக்கு விமான நிலையத்தில் ரசிகர்கள் உற்சாகமான வரவேற்பு கொடுத்தனர். முன்னாள் மேற்கிந்தியத்தீவு கப்ரன் சோபர்ஸ் உள்ளிட்டோரும் வீரர்களுக்கு வரவேற்புக் கொடுத்தனர்.

இதன் பின்னர் மேற்கிந்தியத்தீவு கப்ரன் லாரா நிருபர்களிடம் கூறுகையில் -

சமீபத்தில் மேற்கிந்தியத்தீவு பகுதியில் தாக்கிய சூறாவளியால் மிகப்பெரிய அளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் கிடைதத வெற்றியை அவர்களுக்கு காணிக்கை ஆக்குகிறேன்.



இறுதிப் போட்டிக்கு முந்தைய நாள் என்னை ஒரு பெண் தொலைபேசியில் தொடர்புகொண்டார். அப்போது அவர் என்னுடைய வீடு சூறாவளியால் முழுவதுமாக சேதம் அடைந்துவிட்டது. நாளை நடக்க இருக்கும் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றால் அனைத்து சோகங்களையும் அது மறைத்துவிடும். மேற்கிந்தியத்தீவு வெற்றிபெற்றால் இந்த உலகின் சந்தோஷமான பெண் நானாகத்தான் இருக்கமுடியும் என்று கூறினார்.



அவரின் இந்த வார்த்தை என்னை மிகவும் பாதித்தது. இதற்காகவே வெற்றிபெற வேண்டும் என்று துடித்தேன்.

வீரர்கள் அந்த வெற்றியை பெற்றுக் கொடுத்தனர் எனத் தெரிவித்தார்.

## 48 ஆவது ஹொக்கி சுற்றுப் போட்டி இன்று மாத்தளையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தினால் ஒழுங்கமைக்கபட்டு மாத்தளை ஹொக்கிச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற 48 ஆவது சிரேஷ்ட தேசிய ஹொக்கிச் சுற்றுப்போட்டி இன்றிலிருந்து எதிர்வரும் மூன்றாம் திகதி வரை மாத்தளையில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்ட அணி நேற்று புறப்பட்டுச்சென்றது. நேற்றுச் சென்ற யாழ்.அணி வீரர்களின் விபரம் வருமாறு -

எஸ்.உதயணன் (தலைவர்) ரி.அருட்செல்வன் (உபதலைவர்) எஸ்.என்.சுரேன்குமார் (முகாமையாளர்) வி.டபிள்யூ ஜெயநேசன், ஆர்.குகன், ஆர்.நிக்கேஸ், ஜி.குமரன், எஸ்.எம்.ஐ.ஜெயரஞ்சன், எஸ்.சிவதீஸ், ஆர்.இராஜேஸ்வரன், ஆர்.பிரபாகரன், கே.ஜெகிந்தன், எஸ்.மகீரன், என்.சுதர்சன், ஜி.ஏ.கிரேசியன், ஆர்.கிருபாகரன், ஆர்.ராஜ்ரூபன், எஸ்.உதயணன் ஆகியோர் அடங்குவர்.

### இந்தியாவுடனான முதல் டெஸ்டில்

## அவுஸ்ரேலிய அணியின் துணைக் கப்டன் லீமன்



இந்தியாவுக்கு எதிராக முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் காயம் காரணமாக அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் ஆடவில்லை. எனவே அதனைத் தொடர்ந்து முதலாவது டெஸ்டுக்கான அவுஸ்ரேலிய அணிக்கு கப்டனாக கில்கிறிஸ்ட் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் துணைக் கப்டனாக சகலதுறை ஆட்டக்காரரான லீமன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# சேது சமுத்திரத் திட்டம் அமுலானால் இலங்கை துறைமுகங்களுக்கு பாதிப்பு

## கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவிப்பு

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், இலங்கையில் கொழும்பு, காலி துறைமுகங்களின் நிலை கவலைக்கிடமாவதுடன், கிழக்குப் பிராந்தியக் கடற்பரப்பில் புலிகளின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என சிங்கள அரசு அச்சம் கொள்கின்றது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக புவியியறதுறை மண்டபத்தில் நடைபெற்ற, சேது சமுத்திரத் திட்டத்தினூடாக ஏற்படக்கூடிய பிராந்திய மாற்றங்கள் சம்பந்தமான கலந்துரையாடலில் கருத்துரை வழங்கியபோது, புவியியல் கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவித்தார்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கின்றபோது, இந்தச் சேது சமுத்திரத் திட்டம் 1860 ஆம் ஆண்டு ஆங்கிலக் கடற்படைத் தளபதி 'டெய்லர்' என்பவரால் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1921, 1945, 1963, 1965, 1971, 1981 ஆம் ஆண்டு என்று இதற்குரிய கோரிக்கைகளும் இதனால் அடையக்கூடிய நன்மைகளும் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டும், இத் திட்டம் பற்றி இந்திய மததிய அரசு எந்தவிதமான பயனுள்ள முயற்சிகளையும் மேற்கொள்ளாதுவிட்டது. இந்தத் திட்டத்தினால், தென் மாநிலங்களே கூடுதலான நன்மை அடையக்கூடியதாகவிருக்கும் என்பதே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

மத்தியில் ஆட்சியமைக்கும் ஒவ்வொரு கட்சியினரும் தென் மாநில அரசுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தைப் பரிந்துரைப்பதாக ஜாலம் காட்டித் தேர்தலில் வென்றபின்பு மறந்துபோகின்றன. இந்த நாடகம் 150 வருடங்களாக நடந்துகொண்டிருக்கின்றது.

ஆனால், தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஏனெனில், தமிழ்நாடு போன்ற தென்மாநில அரசுகள் மத்திய அரசில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்ற காலமிது. இந்த மாநிலங்களில் ஆதரவின்றி மத்தியில் ஆட்சி அமைக்க முடியாத நிலை தோன்றியுள்ள இந்த நாட்களில், இந்தத் திட்டமானது நிறைவேறக்கூடிய சாத்தியக் கூறுகள் பெருமளவில் உள்ளன. இந்தத் திட்டத்தினால் இந்தியாவின் பாதுகாப்பு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அயல் நாடுகளுடைய உறவுகள் பலப்படுத்துதல், தொழில் ரீதியாகவும் பலவித நன்மை கிடைக்கும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் திட்டமானது நிறைவேற்றப்படுகின்ற பட்சத்தில் இலங்கையைப் பொறுத்தவரையில் கொழும்பு, காலி போன்ற துறைமுகங்களினூடாக இடம்பெறும் வர்த்தக நடவடிக்கை மிகவும் பாதிப்படையும். இதனால், பொருளாதார ரீதியில் இலங்கை பாதிப்பை எதிர்நோக்கக்கூடிய நிலை ஏற்படுமென அஞ்சுகின்றது. அத்தோடு சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கிழக்கு கடற்பரப்பில் இந்திய ஆதிக்கம் குறைந்து விடும் எனவும் அப்போது அந்தப் பகுதியில் புலிகள் சுதந்திரமாக உலாவ இடமளித்துவிடும் எனவும் அஞ்சுகின்றது.

வடக்கில் இந்தத் திட்டத்தினால் ஊர்காவற்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை போன்ற சிறு துறைமுகங்கள் வளர்ச்சியடைந்து பொருளாதார ரீதியாகவும், கலாசார பண்பாட்டு வளர்ச்சி ரீதியாகவும், தொடர்பாடல் ரீதியாகவும் நன்மையடையக்கூடியதாகவிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையையும் அறிமுக உரையையும் பல்கலைக்கழக அரசியற்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் ஆற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கலாநிதி சூசை ஆனந்தனின் சிறப்புக் கருத்துரையைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் உட்பட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புவியியற்துறை மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாகனத்திலிருந்து தூக்கிவீசப்பட்டு செஞ்சிலுவைத் தொண்டர்கள் காயம்!

(வடமராட்சி)

வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தமான நேற்றுமுன்தினம் ஆலயத்திலிருந்து கடற்கரையை நோக்கிச் செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்று வேகமாகச் சென்ற வேளை விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்த வியத்தில் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களான எஸ்.மாலதி (29) வி.விஜிதா (24) ஆர்.சுஜாதா (29) ஆகியோரே வாகனத்திலிருந்து தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் உடனடியாகவே மந்திகை" வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை இந்த சமுத்திர தீர்த்தத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற கணவன், மனைவி இருவரும் விபத்துக்குள்ளானதில் காயமடைந்தனர்.

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்கள் தேவரன் எனுமிடத்தில், முன்னால் சென்ற ஓட்டோவை முந்திச்செல்ல முற்படுகையில் எதிரே வந்த காருடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவத்தில், குணரத்தினம் குணசீலன் (வயது 23) சிவா (வயது 20) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(14)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மீண்டும் செயற்படத் தொடங்கியது!

(மூளாய்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில், கண்சிகிச்சைப் பிரிவு, சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் ஆய்வுகூட வசதி போன்ற வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நிர்வாகசபைத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழா வைபவத்தில் - வைத்தியசாலையின் முன்னாள் வைத்தியர் சற்குணராஜாவும் அவரது பாரியாரும் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களான கண் சத்திரசிகிச்சை நிபுணர் சிவந்தா மற்றும் சுரேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாப் பிரமுகர்கள் அனைவரும் உரையாற்றும் போது - வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக் குறையையே பிரதானமாகச் சுட்டிக் காட்டினர். போதுமான அளவு கட்டட வசதிகளும், நோயாளர் விடுதிகளும், மிக நவீன மருத்துவ உபகரணங்களும் நிதிவளமும் இருக்கின்ற போதும் வைத்தியர்கள் பற்றாக்குறையே பெரும் பிரச்சினையாக உள்ளதென அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பிட்ட இந்த வைத்தியசாலை கடந்த வருட முற்பகுதியில் செயற்பட ஆரம்பித்த போதும் உத்தியோகபூர்வமாக நேற்றே பல வசதிகளுடன் இயங்க ஆரம்பித்தது.

(207)

## சுழிபுரம் பாணாவெட்டிப் பகுதியில்

# பாடசாலை மாணவிகள் மீது இளைஞர்கள் தகாத சேஷ்டை

(சுழிபுரம்)

சுழிபுரம் பாணாவெட்டிப் பகுதியில் கூடும் இளைஞர்களால், பாடசாலை மாணவிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி முடிவுற்று பாடசாலை மாணவிகள் வீடு செல்லும் நேரத்தில் குறிப்பிட்ட பகுதியில் கூடும் இளைஞர்கள் மாணவிகள் மீது சேஷ்டை புரிந்து வருகின்றனர்.

மாணவிகளின் சைக்கிளுக்கு குறுக்காய் தமது சைக்கிள்களை வெட்டுவது, மாணவிகளின் பெயர்களைச் சொல்லித் தகாத வார்த்தைகளால் பேசுவது, மாணவிகளின் பின்னால் கத்திக் கொண்டு வீடுவரை செல்வது, மாலை நேரங்களில் குறிப்பிட்ட மாணவிகளின் வீட்டு வாசல்வரை சென்று அவர்களின் பெயர்களைச் சொல்லி அழைப்பது போன்ற மிகக் கேவலமான சேஷ்டைகளைப் புரிந்து வருகின்றனர்.

இவர்களைத் தட்டிக் கேட்ட மாணவிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்களையும் இவர்கள் மிரட்டிவருகின்றனர்.

இவர்களது சேஷ்டைகள் குறித்து சுழிபுரம் அரசியற்துறையினரிடமும், அதிபர் மூலமாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையிடமும் முறையிடப்பட்டது. சுழிபுரம் அரசியற்துறையினரால் குறிப்பிட்ட சில இளைஞர்கள் அண்மைக்காலங்களில் எச்சரிக்கை கூட செய்யப்பட்டனர். ஆனால், அவர்கள் மீண்டும் மீண்டும் தமது சேஷ்டைகளைப் புரிந்த வண்ணமுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு இந்த இளைஞர்களைக் கட்டுப்படுத்தி குறிப்பிட்ட மாணவிகளின் இயல்பான பாடசாலைப் பயணத்துக்கு வழிசெய்யுமாறு பிள்ளைகளின் பெற்றோர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

(207)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பரிசளிப்புவிழா

(தேவரையாளி)

தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ம.குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கல்வியியற்துறை பேராசிரியர் க.சின்னத்தம்பி கலந்துசிறப்பிப்பார். (14)

## உருவப்படம் திரைநீக்கம்

(துன்னாலை)

துன்னாலை வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஸ்தாபகர் அமரர் வே.க.வல்லிபுரத்தின் உருவப்படம் கடந்த சனிக்கிழமை திரைநீக்கம் செய்யப்பட்டது.

வல்லியானந்தம் கிளை மைதானம் திலீபன் அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் ஏகாம்பரநாதன் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (14)

## பரிசளிப்பு விழா

(தென்மராட்சி)

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா நிகழ்வுகள் இன்று காலை வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (31)

## பருத்தித்துறை இறங்குதுறையில் பாரம்தூக்கி

பருத்தித்துறை துறைமுகத்துக்கு, துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை 30 மில்லியன் ரூபா பெறுமதியான பாரம்தூக்கியொன்றை வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் மனித வலுவை நம்பியே இந்தத் துறைமுகத்தில் பொருட்களை இறக்கும் பணிகள் இடம்பெற்றுவந்தன. புதிதாக வழங்கப்பட்ட பாரம்தூக்கி மூலமாக ஒரு தடவையில் 10 தொன் எடையுள்ள பொருட்களை இலகுவில் இறக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (14)

## வலி. வடக்கு கலாசாரப் பேரவையின்

# பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சி நாளை தெல்லிப்பளையில் ஆரம்பம்!

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை, மல்லாகம், தெல்லிப்பளை, கட்டுவன், வசாவிளான் மற்றும் மீளக்குடியமராத வலி. வடக்குக்குரிய பிரதேசங்கள் ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த கலாசார விழாவும் பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சியும் நாளை தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு வலி. வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளன.

பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சியானது - முதலாம் நான்காம், ஐந்தாம் திகதிகளிலும், கலாசார விழாவானது - இரண்டாம், மூன்றாம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறவுள்ள பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சி விழாவுக்கு பிரதம விருந்தினர்களாக - யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக- சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம், வலிகாம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப் பண்பாட்டுக் கோலங்கள் கண்காட்சியினுள்ளே பாரம்பரியப் பொருட்கள், தொல்லியல் ஆய்வுகள், சிற்பம், ஓவியம், நெசவு, தையல், தும்புத் தொழிற்பொருட்கள், பனை அபிவிருத்திப் பொருட்கள், மிதிவெடி அபாய விழிப்புணர்வுப் பொருட்கள், உள நல விழிப்புத் தொடர்பான விடயங்கள், வலி.வடக்கு பிரதேச படைப்பாளிகளதும் பாடசாலைகளதும் வெளியீடுகள், வலி.வடக்கு பிரதேசத்தின் மறைந்த கலைஞர்கள், சமய, சமூக, அரசியல் பிரமுகர்களின் புகைப்படங்கள் என்பனவும் காட்சிப் படுத்தபடவுள்ளன.

இந்தக் கண்காட்சி இந்தத் தடவையே முதன்முறையாக நடத்தப்படுவதாகவும், எனவே இந்தக் கண்காட்சியை பார்வையிடும் ஆர்வலர்கள் இந்த முயற்சி தொடர ஆதரவு வழங்க வேண்டுமெனவும் வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (94)

# 'கலைச்சுடர்' விருது பெறும் பதின்மூன்று மூத்த கலைஞர்கள்

(வலிகாமம்)

வலிகாமம் வடக்கு கலாசார பேரவையின், வருடாந்த கலாசார விழாவின் போது - பதின்மூன்று கலைஞர்கள் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதுவரை காலமும் கலைத்துறையில் இவர்கள் ஆற்றிய சேவைக்காகவே இந்தப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவம் பெறவுள்ள கலைஞர்களின் பெயர் விபரம் வருமாறு-

சி.கணேசலிங்கக் குருக்கள், ச.சுப்பிரமணிய சர்மா, சு.வரதராஜ சர்மா, கோகிலா மகேந்திரன், எ.வீ. ஆனந்தன், இ.இந்திரகுமார், வ.வைரவிப்பிள்ளை, ஆ.தில்லைநாயகம், க.சின்னத்தம்பி, மு.சிவப்பிரகாசம், கா.கதிரமலை, நா.நாகரத்தினம், விசேட கௌரவம் பெறும் சி.செந்தூரன்.

இவர்களுக்குரிய கௌரவிப்பு ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள காலாசாரவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் போது வழங்கப்படவுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் வலிகாமம் வடக்கு கலாச்சாரப் பேரவை அளவெட்டி, இளவாலை, பன்னாலை ஆகிய கிராமங்களை இணைத்து நடத்திய கலாசார விழாவின்போது எட்டு கலைஞர்களுக்கு கலைச்சுடர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(94)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : வி.யூட்அபிஷேக்
விலாசம் : பாஷையூர்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




# தென்னை மரங்களைத் தாக்கும் நோய்கள்!

மரங்களும், பயிர்களும் வெவ்வேறு காரணங்களால் நோய்த்தொற்றுக்கு ஆளாகின்றன. இதற்குப் பங்கஸ், வைரஸ், பக்றீரியா, போன்ற பீடைகளும், போஷாக்குக் குறைபாடும் காரணமாக அமைகின்றன.



அந்த வகையில், தென்னை மரத்தில் ஏற்படும் நான்கு வகையான நோய்களைப் பற்றியும், அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பதைப் பற்றியும் பார்ப்போம் -

**1. தென்னம் பாளையில் ஏற்படும் சிதைவு நோய்.**
**2. தென்னைமரத்திலிருந்து நீர் வடியும் நோய்.**
**3. தென்னோலையில் புள்ளி விழும் நோய்.**
**4. தென்னை மரம் சோடையாதல் நோய்.**

### தென்னம் பூபாளையில் ஏற்படும் சிதைவு நோய்.

இந்த நோய் ஒருவகை பங்கஸால் ஏற்படுகிறது. இந்தப் பங்கஸானது - நீர்த்துளிகள் மூலம் பரவுவதால், மழைகாலங்களில் மிக விரைவாகப் பரவும் சாத்தியங்களும் காணப்படுகின்றன. மேலும், ஈரத்தன்மை அதிகமுள்ள நாட்களிலும், உயரமான தென்னை மரங்களின் அருகில் நிற்கும் - உயரம் குறைவான தென்னை மரங்கள், இந்த நோய்த் தொற்றுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் அதிகம். எல்லா விதமான வயதுகளைக் கொண்ட தென்னை மரங்களுக்கும் இந்த நோய் ஏற்படலாம்.



#### நோயின் அறிகுறி

தென்னம் பாளையின் பகுதிகள் அழுகுவதால், அதிலிருந்து துர்மணம் வீசுவதோடு, பாதிக்கப்பட்ட மரங்களின் பாளைகள் விழுந்துவிடும்.

உயரமான மரங்களிலிருந்து இவை விழும் போது, வண்டின் பாதிப்பால் இவை விழுவதாகத் தவறாக எண்ணும் வாய்ப்பும் உண்டு.

#### தடுக்கும் முறை

பாதிக்கப்பட்டு விழும் தென்னம் பாளை யின் பகுதிகளை வேறிடத்துக்குக் கொண்டு செல்லாமல், அந்த இடத்திலேயே எரித்து விடவேண்டும். நோய்த் தொற்றுக்குள்ளான பகுதிகளை வெட்டி எரித்துவிட வேண்டும்.

இதற்காக 1% சி.யு அடங்கிய பங்கஸ் கிருமிநாசினியை அல்லது போடா கலவையைப் பயன்படுத்தலாம். நோயைக் கண்டுபிடிதத பின்னர் மேற்கூறப்பட்ட கிருமிநாசினியில் ஏதாவதொன்றைப் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு நன்றாகத் தெளித்து விடவேண்டும்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மரங்களைச் சுற்றி இருக்கும் ஆரோக்கியமான மரங்களைப் பாதுகாக்கும் முகமாக, பாளையுள்ள இடங்களில் தெளித்துவிட வேண்டும். இதனை 2-3 வாரங்களுக்கு ஒரு தடவை தெளிக்கவேண்டும்.

#### போடா கலவை தயாரிக்கும் முறை

இதற்கு மண்சட்டி ஒன்றைப் பயன்படுத்த வேண்டும்.
பல்மாணிக்கம் (சோடியம் சல்பேட்) 200 கிராம்.
சுட்ட சுண்ணாம்பு 200 கிராம்.
நீர் 25 லீற்றர்.

இந்தக் கலவையைத் தயாரிக்கத் தேவைப்படும் முதல்நாள் பல்மாணிக்கத்தை துணி ஒன்றில் கட்டி, 5 லீற்றர் நீரில் ஒருநாள் இரவு முழுவதும் ஊறவிட்டுக் கரைத்துக்கொள்ள வேண்டும்.

வேறு ஒரு பாத்திரத்தில் 20 லீற்றர் நீரைவிட்டு, அதற்குள் 200 கிராம் சுட்ட சுண்ணாம்பைப் போட்டு நன்றா கக் கரைத்து, மென்மையான துணி ஒன்றால் வடித்துக் கொள்ளவேண்டும்.

பின்னர், இந்தக் கலவையுடன், பல்மாணிக்கக் கலவையையும் சேர்த்து, நன்றாகக் கலக்கவும். இந்தக் கலவையைத் தயாரித்தவுடனேயே பாவனைக்கு எடுக்கவேண்டும். கலவையை நன்றாகக் கலந்திருப்பது முக்கியம்.

### தென்னை மரத்திலிருந்து நீர் வடியும் நோய்

இது தென்னை மரங்களை அடிக்கடி பாதிக்கும் நோயாகும். ஒருவகை பங்கஸால் இந்த நோய் ஏற்படுகிறது.

- தென்னங்காணிகளில் நீர் தேங்கியிருத்தல்,
- மரத்துக்கு இடி விழுதல்,
- தென்னை மரங்களுக்கு அருகில் குப்பை எரித்தல்,
- அதிக மழை,
- அளவுக்கதிகமான உரம் பாவித்தல்,
- சிவந்த வண்டின் பாதிப்பு போன்ற காரணங்களால் நோய் ஏற்படுகிறது.

#### நோயின் அறிகுறி

தென்னை மரத்தில் வெடிப்பு ஏற்பட்டு பின்னர் அந்த வெடிப்பிலிருந்து மண்ணிறமான நீர் வடியும். இந்த நீர் இறுக்கமாகி மரத்தில் கோடுகளாகப் படிந்து காணப்படும்.

அந்த இடத்தை கத்தியால் அல்லது கூரிய ஆயுதத்தால் சீவிப் பார்த்தால், உட்பக்கம் உக்கியிருப்பதை அவதானிக்கலாம்.

#### தடுக்கும் முறை

தென்னைமரத்தில் வெடிப்பு ஏற்பட்ட உடன் ஆரோக்கியமான, மென்மையான தென்னை மரப்பகுதி தோன்றும்வரை அந்த இடத்தைக் கீறி, சீவிவிட வேண்டும். இவ்வாறு சீவிய தென்னை மரத்தின் பகுதிகளை உடனடியாக எரித்துவிட வேண்டும்.

தென்னை மரத்தின் சீவிய பகுதியில் 1% சி.யு கிருமிநாசினி அல்லது போடா கலவையைப் பூசவேண்டும். அதன்பின்னரும் நீர் வடிந்தால், மீண்டும் கலவையைப் பூசவேண்டும். நீர் வடிவது முற்றாக நின்றபின்னர், அந்த இடத்தில் தார்க்கலவையைப் பூசவேண்டும்.

சீவிய பகுதிகளில் கிருமிநாசினியைப் போட முடியாவிட்டால், தார்க்கலவையையாவது பூசவேண்டும். என்ன காரணத்தால் நோய்ப் பாதிப்பு ஏற்பட்டது எனப் பரிசோதித்து, அந்தப் பாதிப்பை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

உதாரணமாக- அதிகளவு நீர் தென்னங்காணிகளில் இருப்பதால் இந்த நோய் ஏற்பட்டு இருப்பின், நீர் வடிந்து போவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

### தென்னோலையில் புள்ளிவிழும் நோய்

பராமரிக்காமல் விடப்பட்ட தென்னோலைகளில் இந்த நோய் ஏற்படலாம்.



#### நோயின் அறிகுறி

தென்னோலைகளில் முதலில் சிறு சிறு புள்ளிகளாகத் தோன்றும் இந்த நோய் - காலக்கிரமத்தில் சிறு சிறு புள்ளிகள் பெரிதாகி, ஒன்றுடன் ஒன்று சேர்ந்துவிடும். பின்னர் அந்த இடங்கள் உக்கிப்போகும்.

முற்றிய, கீழ்ப்பகுதியிலுள்ள இலைகளிலேயே இந்த அறிகுறிகள் அதிகமாகக் காணப்படும்.

(தொடரும்...)

**சசி சந்திரகாசன்**

# மிளகாய்ச் செய்கை

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

#### செடி வாடும் நோய்

பக்றீரியாவால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நோய் ஏற்பட்ட செடிகள் வாடிவிடும். தண்டுகள் அழுகிவிடும். தண்டை வெட்டிப் பார்த்தால், உள்ளே நிறம் வித்தியாசமாக விருக்கும்.

#### நோயைத் தடுத்தல்

1. நீர் விநியோகத்தை அதிகரித்தல்.
2. மண்ணை சூரியஒளிபடுமாறு வைத்திருத்தல்.

#### இலைகளில் புள்ளி வீழும் நோய்

இலைகளில் வட்டமான புள்ளிகள் உருவாகி, மஞ்சள் நிறமாகிப் பின்னர் இலைகள் உதிர்ந்துவிடும்.

#### நோயைத் தடுத்தல்

1. செடியை சுத்தமாக வைத்திருத்தல்.
2. தகுந்த கிருமிநாசினியைப் பாவித் தல்.

#### செடியின் தண்டின் அடிப்பகுதி அழுகுதல் நோய்

செடியின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். செடியின் தண்டின் அடிப்பகுதியில் வெள்ளை நிறமான நுண்ணங்கிகள் இருபபதை அவதானிக்கலாம்.

#### நோயைத் தடுத்தல்

1. நீர் விநியோகத்தை அதிகரித்தல்.
2. மண்ணில் சூரியஒளிபடுமாறு வைத்திருத்தல்.
3. தகுந்த கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்தல்.

#### இலைகள் சிறிதாகும் நோய்

இந்த நோய் சம்பந்தமான ஆய்வுகள் நடைபெற்று வருகிறது. ஓரளவுக்கு இந்த நோயைத் தடுக்க காபனீர் உரம் பாவிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

#### இலைகள் சுருளும் நோய்

பீடைகள் - செடியின் சாறை ஊறிஞ்சுவதனாலும், இலையான்களை உருவாக்கும் வைரஸினாலும் இந்த நோய் ஏற்படுகிறது.

இலைகள் மேற்புறமாக சுருளுவதை அவதானிக்கலாம். இந்தச் செடிகளில் பூக்கும் செயற்பாடு குறைவடையும்.

#### நோயைத் தடுத்தல்

1. தகுந்த உரங்களைப் (யூரியாவை) பாவித்தல்,
2. களைகளை நீக்குதல்.
3. சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல்.
4. பாதிக்கப்பட்ட செடியை பிடுங்கி விடுதல்.

பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகளை, கிருமிநாசினியைப் பாவிப்பதன் மூலம், மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியாது. ஆனால், பரிந்துரைக்கப்பட்ட கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதால் இந்த நோயை ஆரம்பத்திலேயே தடுத்துக் கொள்ள முடியும்.

மேலும் இந்த வகை கிருமிநாசினியைப் பயன்படுத்தி, 14-21 நாட்கள் சென்ற பின்னரே விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மிளகாய் - பாவனைக்கு எடுத்துக்கொள்வதாயின், நன்றாக முற்றிய பச்சை நிறமான மிளகாய்களைப் பறித்துக் கொள்ளலாம். செத்தல் மிளகாய்க்கான விளைச்சலைப் பெறும்போது நன்றாக பழுத்து, சிவப்பு நிறமாக இருக்கும் மிளகாய்களைப் பறித்துக் கொள்ளலாம்.

பொதுவாக செடிகளை முளைக்க வைத்து 70-80 நாட்கள் சென்ற பின்னர் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். அதன்பின்னர் 2-3 மாத காலம் விளைச்சலைப் பெறலாம். 7-10 நாட்களுக்கு ஒருமுறை விளைச்சலைப் பெறலாம்.

முதல் தடவையில் ஆரம்பித்து, பின்னர் ஒவ்வொரு தடவையாகப் படிப்படியாக விளைச்சல் அதிகரிக்கும். இது ஐந்தாவது தடவை வரை அதிகரித்துச் செல்லும். அதன் பின்னர் படிப்படியாக விளைச்சல் குறைவடைந்து விடும்.

3-4 கிலோகிராம் பழுத்த பச்சை மிளகாயைக் காயவைத்து, 1 கிலோகிராம் செத்தல் மிளகாயைப் பெற்றுக்கொள்ளலாம். 100 கிலோகிராம் பழுத்த பச்சை மிளகாயைக் காயவைத்து 33 கிலோகிராம் செத்தல் மிளகாயைப் பெற்றுக்கொள்ளலாம்.

செத்தல் மிளகாயை களஞ்சியப்படுத்தும் பைகளில் 2/3 பங்கே நிரம்பியிருத்தல் வேண்டும். ஒரு மாதகாலத்துக்கு மேல் களஞ்சியப்படுத்துவதாயின், அடிக்கடி வெயிலில் காயவைக்க வேண்டும்.

3 மாத காலத்துக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்தால், நிறம் மங்கிவிடும் வாய்ப்புள்ளது. அத்துடன், செத்தல் மிளகாய் பைகளை களஞ்சியப்படுத் தும் பொழுது - அவை நிலத்தில் படாதவாறு களஞ்சியப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**சசி சந்திரகாசன்**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 10/= | 25/= | 30/= | 12/= | 15/= | 30/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 25/= | 20/= | 15/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 55/= | 60/= | 80/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 25/= | 30/= | 40/= | 40/= |
| பாகற்காய் | 30/= | 35/= | 40/= | 30/= | 30/= | 40/= |
| கரட் | 15/= | 30/= | 40/= | 30/= | 20/= | 60/= |
| பீற்றூட் | 13/= | 15/= | 20/= | 20/= | 15/= | 20/= |
| முருங்கைக்காய் | 35/= | 50/= | 60/= | 40/= | 40/= | 60/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 35/= | 30/= | 30/= | 40/= |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 60/= |

# தொழில்மலர்

# இறால் பண்ணைகளின் அறிமுகத்தால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புக்கள்

இறால் ஏற்றுமதி மூலம் பெறப்படும் பெருமளவு அந்நியச் செலவாணியால் ஈர்க்கப்பட்ட முதலீட்டாளர்கள் - கடலோரப் பிரதேசங்களில் இறால் பண்ணைகளை ஆரம்பிப்பதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். இறால் பண்ணைகளில் மிகப்பெரியளவில் அந்நியச் செலவாணியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது உண்மை.

இவை நல்ல முறையில் நடத்தப்படாது விட்டால், இதனைத் தொடர்ந்து வரும் சூழல் பாதிப்புக்கள் எமக்கு பாரிய பிரச்சினைகளை உருவாக்கிவிடும். இறால் வளர்ப்பு இன்று பல ஆசிய நாடுகளில்



பிரச்சினைக்குரிய தொழிலாக மாறிவிட்டது. இந்தக் கைத்தொழில் மூலம், எதிர்பார்த்த பொருளாதார மேம்பாடு ஏற்பட்டுள்ளதா என்ற கேள்வி- எமக்கு வியப்பூட்டும் பல தகவல்களைத் தந்துள்ளது.

தென்னிந்தியாவில் தமிழ் நாட்டை அண்டிய கரையோரப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட இறால் பண்ணைகளால், முதலில் பாதிக்கப்பட்டவர்கள் - கரையோர மீனவர்களும், விவசாயத் தொழிலாளர்களுமே.

இறால் பண்ணைகளை அமைப்பதில் இருமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஒன்று - மரபுரீதியான பழையமுறை கடலை அண்டிய பகுதி குளங்களுள், கடல் நீரை உள்நிரப்பி, பின் வெளியேற்றும் முறை. மற்றையது - இறால் பண்ணைகளுக்காக குளங்கள் அமைக்கப்பட்டு, நீர்ப் பம்புகள் மூலம், குளங்களுள் கடல் நீரை நிரப்பி செயற்கை முறையில் கிருமிநாசினி, இரசாயனப் பாவனைகள் மூலம் பண்ணைகளைப் பராமரித்தல்.

இதன் மூலம் ஒரு ஹெக்ரேயருக்கு 15 மெற்றிக்தொன் இறால் அறுவடை செய்ய முடிகின்றது. இதன்மூலம் பெறப்படும் வருமானம் 31900 டொலர் ஆகும். இந்த உயர் வருமானத்தால் கவரப்பட்டு, தமிழ் நாடு அரசே கரையோரப் பிரதேசங்களை பாவனைக் குதவாத நிலங்களாகப் பிரகடனம் செய்தது. கரையோரப் பிரதேசங்களை அண்டி வாழ்ந்த மக்கள் -தம் ஜீவனோபாய நடவடிக்கைகளை இழந்தனர். இறால் பண்ணைகள் ஆரம்பிக்க, அந்தப் பகுதியில் படர்ந்திருந்த கண்டல் தாவரங்கள் அழிக்கப்பட்டன.

பெரிய முதலீட்டுக் கம்பனிகள் நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்கின. இதனால் நிலத்தின் விலை அதிகரித்தது. சிறிய விவசாயிகள் - கூடிய விலையில் நிலங்களை விற்கத் தொடங்கினர்.

புதிய நிலத் தரகர்கள், இறால் வளர்ப்பு ஆலோசகர்கள் என புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகின. இவ்வாறான புதிய அபிவிருத்தி நடவடிக்கைகள் - சூழல் பாதிப்பையும், உயிர் சூழலியல் சமநிலையையும் பாதிப்படையச் செய்தது.

தம் வேலைவாய்ப்பை இழந்த கரையோர மக்கள் - இந்தப் புதிய இறால் பண்ணைகள் தமக்கு வேலை வாய்ப்பையோ, உறவையோ கொடுக்கப்போவதில்லை என கொதிதெழுகின்றனர்.

இதுமட்டுமன்றி, இறால் பண்ணைக்கான குளங்களில் இறால் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் உணவில் - 15 வீதம் நீரோடு வெளியேறுகின்றது. 20 வீதம் மலக் கழிவாகின்றது. இவ்வாறு வெளியேறும் கழிவுகள் கரிய படைகளாக நீர்நிலையுள் படிகின்றது. இதனை அகற்ற வேண்டும். அல்லது மண்ணோடு பசளையாக விடவேண்டும்.

அத்துடன் குளங்களில் கிருமிநாசினிகள், இரசாயனப் பொருட்கள் அதிகமாகப் பாவிப்பதால், இவை கழிவு நீருடன் கடலுள் கலக்கும்போது, அந்தப் பகுதியில் வாழும் மீனினங்கள் இறக்கின்றன. நன்னீர் நிலைகளும் பாதிக்கப்படுவதுடன், கரையோரப் பிரதேச சூழலும் மாசடைகின்றது.

தொடர்ச்சியான இரசாயனப் பாவனையால், அண்மைய விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுகின்றது. இறால் வளர்ப்புக்கு உப்பு தேவைப்படுவதால், உப்பு நீர் - கடலிலிருந்து கல்வாய்கள் மூலம் உட்கொண்டு வரப்படும்போது, அவை தரைக்கீழ் நீரோடு கலந்து, நன்னீர் உவர்நீராகும் ஆபத்தும் உண்டு.

இறால் பண்ணைகளில் ஆண்களே அதிகமாக வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பெண்கள் இதனால் பயனடைவதில்லை. இறால் பண்ணைகளின் வருகையால் பாதிப்படைந்த மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி வேலைதேடிச் செல்கின்றனர்.

இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு மத்தியில், இறால் பண்ணைகளில் ஏற்படும் வெண புள்ளி நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், ஏராளமான பண்ணைகள் மூடப்பட்டுள்ளன. தாய்வான் உலகில் மிகப்பெரிய இறால் ஏற்றுமதி நாடாக விளங்கியது.

1987 ஆம் ஆண்டில் 90,000 மெற்றிக் தொன் இறால் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. சடுதியாக ஏற்பட்ட நோய் காரணமாக, உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இந்தோனேசியா, சீனா போன்ற நாடுகளிலும் பெருமளவில் இறால் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், வைரஸ் தாக்கத்தால் நோய் கட்டுப்படுத்த முடியாது, பல பண்ணைகள் மூடப்பட்டு, உற்பத்தியிலும் வீழ்ச்சி கண்டது.

இந்தியாவின் ஆந்திரா கரையோரப் பகுதிகளில், வெண்புள்ளிநோய் காரணமாக 1994 ஆம் ஆண்டு பல இறால் பண்ணைகள் மூடப்பட்டன. மலேசியாவிலும் 40-60 இறால் பண்ணைகள் ஒரேநேரத்தில் மூடப்பட்டன.

இறால் பண்ணைகள் கடலோரங்களை அண்டி அமைக்கும்போது புதிதாகக் குளங்கள் அமைக்கப்படுவதால், மீனவர்கள் கடலைச் சென்றடைவதற்குத் தடங்கல் ஏற்படுகின்றது.

இலங்கையின் வடமேற்கு கடல் நீரேரிப் பகுதிகளில் சிலாபம், முந்தல், புத்தளம் பகுதிகளில் இறால் பண்ணைகள் ஆரம்பித்தபோதிலும், இவற்றில் பல இன்று மூடப்பட்டு, விளைச்சல் குன்றிய நிலை ஏற்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டிலிருந்து முந்தல் கடல்நீரேரிப் பகுதி, சிலாபம், புத்தளம் ஆகிய பகுதிகளில் இந்தப் பண்ணைகள் காரணமாக பாரதூரமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடல் நீரேரிகளில் மீன்கள் அழிகின்றன. உப்புத்தன்மை கால்வாய்களில் அதிகரித்துள்ளது. புதிய குளங்களை அமைப்பதால், மண்ணரிப்பு ஏற்படுகிறது. இறால் பண்ணைகளுக்கு அண்மையில் மீன்பிடிக்க முடியாத நிலை மீனவருக்கு ஏற்பட்டுள்ளது.

கிணறுகளில் உவர்நீர் கலத்தல், கடல் நீரேரிப்பகுதிகளில் கழிவுகள் வீசப்படல் காரணமாக - வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், புற்றரை நிலம், கண்டல் தாவர இனம் என்பன அழிவடைந்துள்ளன.

ஏரிக்கரையை நாடி இடம்பெயர்ந்துவரும் பறவைக் கூட்டங்களைக்கூட தற்போது இங்கு காணமுடிவதில்லை.

தற்போது 4000 ஹெக்ரேயர் நிலப் பகுதிகளில் அனுமதி பெறப்படாமலேயே சிறிய, பெரிய இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு இறால் பண்ணை அமைப்பதாயின், சூழல் தாக்க மதிப்பீட்டு சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் - மீன்பிடி நீர்வளத்துறை அமைச்சின் அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

1995 ஆம் ஆண்டில் 300 பண்ணைகளில், 103 பண்ணைகளே இவ்வாறு தேவையான அனுமதியைப் பெற்றிருந்தன. 600 ற்கும் மேற்பட்ட சிறிய பண்ணைகள் எதுவித அனுமதியுமின்றி செயற்படுகின்றன.

வியட்நாம், தாய்லாந்து, சீனா, ஈக்குவடோர் பகுதிகளில் இறால் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதால், முதலீட்டாளர்கள் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை போன்ற ஆசிய நாடுகளை நோக்கி படையெடுத்துள்ளனர்.

இறால் பண்ணைகளால் பாரிய சூழல் பாதிப்பு ஏற்படுவதால், இவற்றை ஆரம்பிப்பதற்கு முன் சட்ட வரையறையுள், சூழல் பற்றி மிகுந்த அவதானம் அவசியமாகும்.

யாழ். பிரதேச கரையோரப் பகுதிகளை நோக்கி இறால் பண்ணை முதலீட்டாளர்களின் பார்வை திரும்பியுள்ளமை கவனிக்கத்தக்க விடயமாகும்.

- சறோஜா சிவச்சந்திரன் M.A

# எந்தவொரு தொழில் முயற்சியும் உடனடி வெற்றியைத் தராது!

'நீங்கள் திட்டமிடத் தவறினால், தோற்பதற்காகத் திட்டமிடுகிறீர்கள் என்று அர்த்தம்'. திட்டமிடுதல் என்பது எவ்வளவு முக்கியம் என்பதை இதைவிடச் சிறப்பாகவும், சுருக்கமாகவும் கூறமுடியாது. வியாபாரத்தில் திட்டமிட்டுச் செயற்படாவிட்டால், அது எத்தனை பெரிய தொழிலாக இருந்தாலும் குறுகிய காலத்தில் நட்டமடைய வேண்டி ஏற்படும.

தொழிலில் முன்னேற வெறும் கனவுகள் இருந்தால் மட்டும் போதாது. கனவுகள் நிறைவேறத் தெளிவான செயற்திட்டம் அவசியம். உங்களுக்குள் இருப்பது நடைமுறைப்படுத்த இயலாத கனவு இல்லை - ஒரு சாதனைக்கனவு என்று உங்களுடன் பணியாற்றும் அனைவருக்கும் நம்பிக்கை வரவேண்டும் அப்போதுதான் அவர்களும் மிக ஈடுபாட்டோடும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் உங்கள் கனவை நனவாக்கத் தோள்கொடுப்பார்கள்.

நீங்கள் எட்ட நினைப்பது மிக உயரமானதாகக்கூட இருக்கலாம். ஆனால், அதை அடைய வேண்டுமானால், ஒவ்வொருபடியாக எடுத்து வைத்துத்தான் முன்னேறிச் செல்ல வேண்டும்.

எனவே, ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அடுத்த பத்து வருடங்களுக்கான தொலை நோக்குத் திட்டம் இருக்க வேண்டும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களுக்கான செயற்திட்டம் இருக்க வேண்டும். நடைமுறை ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கான வரவு-செலவுத் திட்டம் இருக்கவேண்டும். இவற்றைவிட எதிர்பாராது நடக்கும் விடயங்களை எதிர்கொள்ள - அவசரத்திட்டமும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

எந்தத் தொழிலாக இருந்தாலும், எடுத்த உடனேயே வெற்றிபெற்றுவிட முடியாது. அதனால் தோல்வி கற்றுத்தரும் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியம். வெற்றியாளனாவதற்கு இடைவிடாத முயற்சியும், சோர்வடையாத மனமும், எல்லாவற்றுக்கும் மேலாக - நீண்ட கால அவகாசமும் தேவை. உடனடி வெற்றி கொடுக்கும் போதை, தடுமாற்றத்தை ஏற்படுத்தும்.



உடனடி வெற்றியைப்போலவே, முறையற்ற தொழில் செய்து - குறுக்கு வழியில் விரைவில் பணம் சம்பாதிப்பதும் நீண்டகால பயனை தராது. இந்த வழிகளில் இறங்கினால், நிம்மதியையும் இழக்க வேண்டி ஏற்படும்.

எனவே நிலையான வெற்றி, அவசரமான தேடலில் கிடைக்காது. அதற்கு நிறைய பொறுமை தேவைப்படும். பல வருடங்கள்கூட எடுக்கலாம். வியாபாரத்தில் முதல் முயற்சி பெரும்பாலும் வெற்றியடைவதில்லை. வாடிக்கையாளருக்கும், சந்தைக்கும் ஏற்ற மாதிரி வியாபாரத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வரவேண்டியிருக்கும். அந்த மாற்றங்கள் எதுவெனத் தெரிந்து கொள்ளும் காலகட்டங்களை எடுத்துக்கொள்ளலாம். இந்தக் கால கட்டம் மிகவும் சிரமமானது.

இந்தச் சிரமமான காலகட்டத்தை எதிர்கொள்ளும் தைரியம் தொழில் செய்ய நினைப்பவர்களுக்கு அவசியம் தேவை. இதனை எதிர்கொள்ளாமல் வெற்றிச் சிகரத்தை யாராலும் தொடமுடியாது.

புதிய தொழில்ஆரம்பிக்க நினைப்பவர்கள் - இளம் வயதினராக இருந்தால், வேறு ஒரு நிறுவனத்துக்கோ அல்லது தொழிற்சாலைக்கோ வேலைக்குச் சென்று, தொழில் சம்பந்தமான அததனை நெளிவு, சுழிவுகளையும் கற்றுக்கொண்ட பின்னர் சுயதொழில் தொடங்கினால், தொழிலில் தோல்வி வரும்போது, அதை எப்படி சமாளிப்பது என்று ஓரளவுக்குத் தெரிந்து கொள்ளமுடியும்.

வெற்றியாளர்கள் - எப்பொழுதும் பிரச்சினைகளை, தோல்விகளை வாய்ப்புக்களாகப் பார்க்கிறார்கள். தோல்வியாளர்களோ - வாய்ப்புகளைக்கூடப் பிரச்சினைகளாகத்தான் பார்க்கின்றார்கள்.

என்ன பொருளாக இருந்தாலும், வியாபாரத்தில் முதன் முதலில் மாற்றத்தைக் கொண்டு வருபவர்கள்தான் கவனிக்கப்படுகிறார்கள். எனவே உங்களுடைய தொழிலைத் திட்டமிட்டு நகர்த்திச் செல்லுங்கள். எனவே உங்களுடைய தொழில் வெற்றிக்குப் பயனளிக்கும்.

# தகவல் யுகத்தில் கணினிப் புரட்சி

இன்று தொழில் நுட்பத்தின் மூலமாகவே நாம் தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றோம்.

இவ்வாறு தொழில் நுட்பத்துடன் இணைந்திருக்கும் தகவல் - கணினி மயமாகி விட்டது. எனவேதான் அனைத்துத் தொடர்புகளிலும், உலகத் தொடர்புகளிலும் கணினி ஆக்கிரமித்துள்ளது.

பரந்து விரிந்த உலகத்தை - சிறு கிராமமாக உருமாற்றிச் சிறிதாக்கியிருக்கும் தகவல் யுகத்தில் 'இன்டர் நெற்' பிரதான இடத்தை வகிக்கின்றது. பல்வேறு செயற்திட்டங்கள் ஒன்றாக விளங்கும் இன்டநெற் மூலம், உலகின் எந்தப் பகுதியுடனும் தொடர்பு கொள்ளலாம்.

நூற்றுக்கணக்கான விடயங்களைப் பரப்பி, மானிடவர்க்கத்திடையே மிக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி இருக்கிறது. நாங்கள் கணினியைப் பாவிப்பதன் முக்கிய காரணங்கள் -

**1. இது மிகவேகமான சேவையைத் தருகிறது.**

**2. இது மிகவும் நம்பகரமானது.**

**3. பெருந்தொகையான தகவல்களை ஒழுங்கான தொடர்பில் ஒழுங்குபடுத்தி, மிகவும் சிறந்த முகாமைத்துவத்துக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுத் தருவதுடன், அதனூடாக அதிவிசேட வெற்றிகரமான தீர்மானங்களை எடுப்பதற்கு உபயோகமாகும்.**

கடந்த காலம் முதல், தற்காலம் வரை ஏற்பட்டுள்ள கணினி அபிவிருத்தி அதிசயிக்கத்தக்கதாகவுள்ளது. பெரிய அளவுள்ள கணினிப் பொறி - இன்று சட்டைப்பை அளவு கணினியாகி விட்டது.

இந்த வேகத்தில் மாற்றங்களை, புரட்சியை ஏற்படுத்தி வரும் கணினியை - நன்மைகளுக்கும், வளர்ச்சிகளுக்கும பயன்படுத்த வேண்டிய தேவை அவசியமானதாகும்.

## சேதமடைந்த நிலையில் பாலம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் வீதியிலுள்ள பாலம் உடைந்த நிலையில் காணப்படுகிறது.

தற்போது மழைக்காலம் ஆகையால், இந்த வீதியால் செல்லும் பயணிகள், வாகனங்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதுடன், ஆபத்துக்களையும் சந்திக்க நேரிடுகிறது. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இந்தப் பாலத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இடைக்காலத் தன்னாட்சியை வழங்கி சுமுகமாக வாழ நடவடிக்கை எடுக்கவும்

### - மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(வவுனியா)

இடைக்கால தன்னாட்சி வரைபை ஏற்று, புலிகளுக்கு அதிகாரத்தை வழங்கி வடக்கு - கிழக்கில் மக்கள் சுமுகமாக வாழ அரசு நடவடிக்கை எடுக்கவில்லையாயின், நாடு இரண்டாக பிரிவதை யாரும் தடுக்க முடியாது என மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.எஸ்.ரட்ணாயக்க தெரிவித்தார்.

வவுனியாவில் நேரியகுளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலையை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது-

வடக்கு - கிழக்கில் இவ்வாறான கட்டடங்கள் கட்டி முடிப்பதற்கான காரணம் சில நிறுவனங்கள் மூலம் சிறுதொகை நிதியாவது கிடைப்பதால்தான். போர் நடைபெற்ற காலத்தில் நிதி முழுவதையும் அரசு தென்னிலங்கையிலேயே செலவு செய்தது இன்றும் இவ்வாறு செய்யத்தான் விரும்புகின்றது. இதனைத் தவிர்க்கவே இடைக்கால ஆட்சி ஒன்றை விடுதலைப்புலிகள் கோருகின்றனர். இதனைத்தான் ஜே.வி.பி. யினர் நாடு பிரிந்து போகப் போகின்றது என பிரசாரம் செய்கின்றனர். இந்த விடயம் முற்றும் தவறாது என அவர் மேலும் தெரிவித்தார்.(03)

## கட்டடத்திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் கட்டடத் திறப்பு விழா நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு பாடசாலை முதல்வர் ம.பத்மநாபன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் சிறப்புவிருந்தினராக கலந்து கொள்வார்.

## கிளிநொச்சி வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் அழிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றின் மீது நிதித் துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, காலாவதியான உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கிளிநொச்சி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனையின்போது, காலாவதியான பால்மா வகைகள், ஜாம், பழரசம் போன்றவையே கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் வர்த்தக நிலைய உரிமையாளர்களின் முன்னிலையில் அழிக்கப்பட்டன.




## 'பச்சைவயல் கனவு' வெளியீட்டு விழா!

எழுத்தாளர் தாமரைச் செல்வியின் 'பச்சைவயல் கனவு' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - வரவேற்புரையை சி.கந்தசாமியும், தலைமையுரையை கருணாகரனும், வெளியீட்டுரையை கிளிநொச்சி தமிழ்ச்சங்க செயலர் வே.பரமநாதபிள்ளையும் நிகழ்த்துவார்கள். இந்த நிகழ்வின் முதற்பிரதி கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் பெறவுள்ளார்.

இந்த நிகழ்வின் சிறப்புப் பிரதி ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் ஆ.மார்க் கண்டு பெற்றுக்கொள்வார். இந்த நிகழ்வின் சிறப்புரை, மதிப்புரைகளை யோகரட்ணம் யோகி, ஓய்வு பெற்ற உபதபாலதிபர் நா.யோகேந்திரநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையை இந்த நாவலின் எழுத்தாளரான தாமரைச் செல்வி நிகழ்த்துவார். நன்றியுரை கிளிநொச்சி மகாவித்தியாலய உபஅதிபர் பங்கயற்செல்வன் நிகழ்த்தவுள்ளார்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் புளியங்குளம் ஆயப்பகுதியில் 2004 ஆம் ஆண்டு ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் நடாத்தப்பட்ட ஆயப்பகுதி பணியாளர்களுக்கான முதலுதவிப் பயிற்சிநெறியில் கலந்து, பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இந்த மாதம் நடுப்பகுதியில் புளியங்குளத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தநிகழ்வு ஆயப்பகுதியின் புளியங்குளப் பகுதி மேலாளரின் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் வன்னிப்பகுதிக்கான சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளர் வே.சிறிதரன், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பகுதித்திட்ட இணைப்பாளர், திட்ட உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் ஆகியோரும், ஆயப்பகுதி பணிப்பாளர், பொறுப்பாளர்கள், மேலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், முதலுதவிப் பெட்டியும் வழங்கப்பட்டது.

# வீடுகளற்ற மாவீரர் குடும்பங்களுக்கு காப்பகத்தால் வீடுகள் அமைத்துக்கொடுப்பு!

(கிளிநொச்சி)

தேசியத் தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப தமிழீழத்தின் சகல மாவட்டங்களிலும், வீடுகளற்ற மாவீரர் குடும்பங்களுக்கு மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பகம் - வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளைச் செய்து வருகின்றது. இதற்கமையவே வத்திராயன் கிராமத்தில் மாவீரர் குடும்பங்களுக்கு ஐந்து வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன என மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு செ.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது மாவீரர், போராளிகள் குடும்பநலன் காப்பாகப் பொறுப்பாளர் திருக்குமரன் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டுக் கிராமத்தில் கட்டடப்பட்ட 5 வீடுகள் மாவீரர் குடும்பங்களுக்கு கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 18 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு, மாவீரர் குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றன, தொடர்ந்து சகல மாவட்டங்களிலும் மாவீரர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் படவிருப்பதுடன் மாவீரர், போராளிகள் குடும்ப இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரை - பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஏற்றிவைத்தனர். மாவீரர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் முதலில் 2ஆம் லெப்.வீரையனின் குடும்பத்துக்குரிய வீட்டின் நாடாவை வெட்டி வீட்டுக்குரிய சாவியை மாவீரர் பெற்றோரிடம் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கையளித்தார்.

இரண்டாவதாக 2ஆம் லெப்.தணிகைச்செல்வனின் குடும்பத்துக்குரிய வீட்டின் நாடாவை வெட்டி வீட்டுக்குரிய சாவியை பெற்றோரிடம், மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் கையளித்தார்.

மூன்றாவதாக 2ஆம் லெப்.குமாரின் குடும்பத்துக்குரிய வீட்டின் நாடாவை வெட்டி வீட்டுக்குரிய சாவியை பெற்றோரிடம் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் கையளித்தார்.

நான்காவதாக வீரவேங்கை விடுதலையின் குடும்பத்துக்குரிய வீட்டின் நாடாவை வெட்டி வீட்டின் சாவியை பெற்றோரிடம் கடற்புலிகளின் அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் பூரணி கையளித்தார்.

ஐந்தாவதாக கப்டன் அருளின் குடும்பத்துக்குரிய வீட்டின் நாடாவை வெட்டி வீட்டின் சாவியை பெற்றோரிடம் விடுதலைப்புலிகளின் நிதித் துறையைச் சேர்ந்த து.கி.தாயகன் கையளித்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப்புலிகளின் போராளிகள், பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர். (21)

## நடமாடும் ஆய்வு கூடசேவை

கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையினரால் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடநெறிக்காக மாணவர்களுக்கான நடமாடும் ஆய்வு கூடச்சேவை நேற்று தொடகம் மூன்று நாட்களாக வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது.

## இளைஞர் - யுவதிகளின் விபரம் திரட்டு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் முல்லைத்தீவு அரச செயலகம் விபரங்களை திரட்டி வருகிறது.

தெரிவு செய்யப்படும் இளைஞர் யுவதிகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் பயிற்சி இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

## நிர்வாகக்குழு தெரிவு

கிளிநொச்சி மாவட்டத்தின் செஞ்சிலுவைச்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் - எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவர் க.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் புதிய நிர்வாகக் குழுத் தெரிவு நடைபெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

## தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு முல்லைத்தீவில் மாபெரும் விளையாட்டுப்போட்டி

தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டி தொடர்பாக தமிழீழ விளையாட்டுத்துறையினரை, விளையாட்டுக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு இந்த போட்டியில் கலந்து கொள்ள முடியும் என முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## நானாட்டானில் வாழ்ந்த 8 குடும்பங்கள் அளம்பில் பகுதிக்கு மீளக்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து மன்னார் மாவட்டத்தின் நானாட்டன் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அகதி முகாமில் தங்கியிருந்த எட்டு குடும்பங்கள் நேற்றுமுன்தினம் மீளவும் தமது சொந்த இடங்களுக்கு சென்றனர்.

முல்லைத்தீவு அளம்பில் பகுதியைச் சேர்ந்த 8 குடும்பங்களை கொண்ட 35 பேரே கடந்த கால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மன்னார் நானாட்டன் பகுதியில் தற்காலிகமாக குடியமர்ந்தனர்.

இவர்கள் சமாதான சூழல் நிலவுகின்ற தற்போதைய சூழலில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர விரும்பியதற்கு இணங்க நானாட்டன் பிரதேச செயலாளரின் உதவியுடன் முல்லைத்தீவு அளம்பில் பகுதியை சென்றடைந்தனர். (201)

## விவசாயிகளுக்கு கடனுதவி

(மன்னார்)

மன்னார் அடம்பனில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய வங்கியூடாக விவசாய அமைப்புக்கள் மூலம் காலபோக நெற்செய்கைக்கான விவசாய கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு விவசாயிக்கும் 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்து பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது விவசாய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கான கடனுதவிகளை வழங்குவதற்கே மன்னார் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## பூநகரி கூட்டுறவு சங்கக் கிளைகளுக்கு ஆறு இலட்சம் ரூபா நிதிஒதுக்கீடு

பூநகரிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின்போது அழிக்கப்பட்ட மூன்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஞானிமடம், பள்ளிக்குடா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளே மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த ஆண்டு இடம்பெற்ற போரின் போது, இந்த மூன்று கிளைகளின் மூலம் 18 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட புனரமைப்புப் பகுதியின் கீழ் 6 லட்சம் ரூபா நிதி இந்த கிளைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாவசிய பொருட்களுக்கான விலையில் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பேணப்படுவதில்லை

(மன்னார்)

மன்னார் - இலுப்பைக்கடவை பகுதி விற்பனை நிலையங்களில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பேணப்படுவதில்லை.

இந்தப் பகுதியிலுள்ள விற்பனை நிலையங்களில் விலைப்பட்டியலில் குறிக்கப்பட்டிருக்கும் விலையை விடக் கூடுதலான விலைக்குப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். இந்த விடயம்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### புளியங்குளம் பகுதியில்

## நெருப்புக்காய்ச்சல் நோய் தொற்றுவதற்கான அறிகுறி

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக தமிழீழ சுகாதாரப் பிரிவினர் மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

தற்போது புளியங்குளம் பகுதியில் இந்த நோய் தொற்றுவதற்கான அறிகுறி ஏற்பட்டுள்ளது. மக்கள் கூடுதலாக, நெருக்கமான முறையில் வாழும் பிரதேசங்களில் உரியமுறையில் சுகாதார நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

குறிப்பாக தேநீர்க் கடை உரிமையாளர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும், தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பிரசார யுத்தம் ஆரம்பமாகிவிட்டது

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக கடந்த ஐ.தே.முன்னணி ஆட்சியின்போது மேற்கொள்ளப்படத தொடங்கிய சமாதான முயற்சிகள் தற்போது பெரும்பாலும் எந்தவிதமான முன்னேற்றமுமின்றி அதன் எதிர்காலம் தொடர்பாக நம்பிக்கையற்ற சூழல் நிலவுகின்றவேளையில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசானது சமாதான நகர்வுகள் தொடர்பான உள்ளக கருத்துமுரண்பாடு காரணமாக அதனை மேலும் சிக்கலுக்குள்ளாக்கி வருகின்றது என்றே கூறவேண்டும்.

இந்தச் சிக்கலுக்குள்ளாக்கும் நடவடிக்கையானது நன்கு திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றதென்றே கூற வேண்டும்.

இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் கூட்டுக்கட்சிகள் யாவும் அரசு அமைவதற்கு முன்னரே... இன்னும் தெளிவாகக் கூறுவதானால் கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னரே... அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னரேயே சமாதான முயற்சிகளுக்கு முற்றலும் பகிரங்கமாக எதிர்ப்பினைக் காட்டிவந்தமைகளேயாகும்.

இந்தக் கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு - இனப்பிரச்சினைக்குத் தீர்வு எந்தவகையில் ஏற்பட்டாலும், அதற்கான முயற்சிகளை எவர்மேற்கொண்டாலும் அது பாதிப்பாக அமையும் என்றே இந்தக் கட்சிகளின் தலைமைகள் காலம் காலமாக நம்பிவந்துள்ளமையால் அவர்களால் சமாதானம் தொடர்பான எந்த நகர்வுகளையும் ஏற்றுக்கொள்ள முடிந்ததே இல்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்குதல் என்பது பேரினவாதிகளின் அரசியல் அபிலாஷைகளுக்கு முரணான விடயம் என்பதே அவர்களின் தீர்க்கமான கருத்து நிலைப்பாடாகவும் உள்ளது. இந்த நிலைப்பாடே அவர்களை சமாதான முயற்சிகளுக்கெதிராக செயற்படத்தூண்டி வருகிறது என்பதே யதார்த்த நிலையாகும்.

இந்தநிலையில், இவர்களிடம் இவர்களின் கருத்து நிலைப்பாடு தொடர்பாக மாற்றங்கள் எதுவும் உடனடியாக ஏற்படுமென எவராலும் நம்பமுடியாது.

தேசிய மற்றும் சர்வதேசிய அழுத்தங்கள் எவையும் இவர்களின் சமாதான எதிர்ப்பு நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதுமில்லை. அத்தகைய அழுத்தங்களை பேரினவாதிகள் கருத்தில் கொண்டதாக வரலாறும் இல்லை...

சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதில் அவர்கள் கையாண்டு வரும் பிரசார தந்திரோபாயங்கள் கடந்த காலங்களில் அவர்களுக்குச் சாதகமான பலன்களைக் கொடுத்திருந்தால் -தொடர்ந்தும் அவர்கள் அத்தகைய தந்திரோபாயங்களைக் கையாள நினைக்கிறார்களேயன்றி சர்வதேச சமூகத்தின் சமாதானக் கோரிக்கைகளுக்கு மதிப்புக்கொடுத்து நடப்பவர்களாக இல்லை.

கடந்த சிலவாரங்களாக ஜனாதிபதியும், அரசாங்கமும் மீண்டும் தமது விடுதலைப் புலிகள் எதிர்ப்புப் பிரசாரத்தை உலகளாவியரீதியில் தீவிரப்படுத்தும் முனைப்புடன் திட்டமிட்டுச் செயற்பட்டுவருகின்றதை காணக்கூடியதாக உள்ளது.

தாங்கள் ஏதோ சமாதானத்திற்காக அர்ப்பணிப்பு மற்றும் விட்டுக்கொடுப்புடன் தீவிரமாகச் செயற்பட்டுவருவதாகவும், ஆனால், விடுதலைப் புலிகள்தான் இன்னமும் கடும்போக்குடன் இறுக்கமாக இருப்பதன் காரணமாக சமாதான முயற்சிகளில் தேக்கநிலை தொடர்வதாகவும், விடுதலைப் புலிகள் தளர்வுப் போக்குக்குவர சர்வதேச சமூகம் நிர்ப்பந்திக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தனது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின்போது பிரசாரம் மேற்கொண்டதை இங்கு கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

ஏற்கனவே லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் - விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசார யுத்தமொன்றினை சர்வதேச மட்டத்தில் இலத்திரனியல் ஊடகங்களூடாக மேற்கொண்டு வருவதாகப் பரவலாகப் பேசப்பட்டுவரும் சூழலில் ஜனாதிபதியின் கருத்துக்கள் அதற்கு உரமூட்டுவதாக ஆக்கப்பட்டுள்ளதாகக் கூறுவது பொருத்தமானதேயாகும்.

அரசின் இந்தப் பிரசாரயுத்தம் வெறுமனே விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான ஒன்று என்று கூறிவிடமுடியாது.

தமிழ் மக்களுக்கும், சமாதான முயற்சிகள் எதிர்காலத்துககு எதிரானதும், பாதகமானதுமான விடயமாகவே இதனைக கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்தப் பிரசார நடவடிக்கைகள் முறியடிக்கப்படாவிட்டால் விடுதலைப் புலிகளுடன் முழுத்தமிழ் மக்களையுமே பயங்கரவாதிகள் என்றும், அவர்களின் போராட்டம் பயங்கரவாத நடவடிக்கைகள்தான் என்றும் மீண்டும் ஒருசுற்றுப் பிரசார யுத்தத்தை ஆரம்பித்து - மீண்டும் சமாதானத்திற்கான யுத்தமென்ற முன்னாள் படை நடவடிக்கையை தொடர்வதற்குரிய நியாயப்பாடுகளை உலகிற்கு உளறத்தொடங்கிவிடுவார்கள் என்பது உறுதி.

இந்த அரச நியாயப்பாடுகளின் பொய்மையை, ஏமாற்றுத் தனத்தை கபட நோக்கத்தை உலகறியச் செய்யவேண்டியது காலத்தின் தேவையாகியுள்ளது.

ஜனாதிபதி தனது பிரசார நடவடிக்கையை முடித்துக் கொண்டுவந்து தனது பூலோபாயம் அரசுக்குச் சாதகமான பலன்களைத் தந்துள்ளதாகக் கூறத்தொடங்கியுள்ள வேளையில் புலிகள் தமது முறிடியடிப்புப் பிரசார நடவடிக்கைகளுக்குத தயாராகியுள்ளார்கள்.

எவ்வாறாயினும், எந்த யுத்தத்தின் அடிப்படையிலும் தமிழ் மக்களின் போராட்டநியாயம் வலியுறுத்தப்படவேண்டும். அதுவே இன்றைய முக்கிய தேவையுமாகும்.

## நாடும் நடப்பும்




# 28 பாதாள உலகக் குழுக்கள் கொழும்பு நகரில் செயற்படுகின்றன!

## பொலிஸ் அறிக்கைகள் தெரிவிப்பு

கொழும்பு நகர எல்லைக்குள் 28 பாதாள உலக குழுக்கள் செயற்பட்டுவருவதாக புலனாய்வு அறிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்தக் குழுக்களில் ஆகக்குறைந்தது 300 பேராவது அங்கம்வகிப்பதாக பொலிஸ் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்கள் ரி-56 ரக தன்னியக்க துப்பாக்கிகள், தன்னியக்க கைத்துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் உயர் தொழில்நுட்பத் தொலைத் தொடர்பு கருவிகள் மற்றும் பல நவீன ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாக பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் குழுக்கள் கொழும்பு நகரை தமது ஆளுகைக்குட்பட்ட வலயங்களாக பிரித்து வைத்துள்ளதாகவும், ஒவ்வொரு வலயத்திலும் குறிப்பிட்ட ஒரு குழுவினர் செயற்பட்டு வருகின்றனர்.

கொலை கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் மற்றும் விநியோகம் ஆயுதங்களை வாடகைக்கு வழங்குதல், கட்டணம் செலுத்தப்பட்ட கொலைகள் மற்றும் பல சட்டவிரோத செயற்பாடுகளை இந்தக் குழு தமது ஆளுகைப் பகுதிகளிலும் அவற்றை தாண்டியும் மேற்கொண்டு வருவதாகவும், இந்தக் குழுக்களிடையில் காணப்படும் பிணக்குகளே அதிகளவான கொலைகளுக்கு காரணமாக அமைந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிகச்சிறந்த புலனாய்வு வலையமைப்பை கொண்டுள்ள இந்த குழுக்களின் செயற்பாடுகளை அரசாங்கதின் குற்றவியல் தடுப்பு பொலிஸாரால் முறியடிக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பாதாள உலக குழுக்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளின் பக்கத் துணையுடனேயே செயற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்!

தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர்தின முதியோர் வார விழா நிகழ்வுகள் எதிர்வரும் 5 ஆம் திகதி மதியம் 1.00 மணிக்கு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரிக் கிளை மு்காமையாளர் க.இராசதுரை, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.முருகதாசனும் கலந்துகொள்வர்.

இந்தநிகழ்வுகளில் சிறுவர்தின விழா கட்டுரைப்போட்டி முதியோர் தின விழா கட்டுரை, கவிதை போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும், முதியோர் கௌரவிப்பும் இடம்பெறும்.

கலை நிகழ்வுகளில் சிறப்புச் சொற்பொழிவாக, தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் கில்பேட் குணம் சிறப்புச் சொற்பொழிவும், மட்டுவில் சந்திமௌலீச வித்தியாலய மாணவர்களது நாட்டுக்கூத்தும், அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவ மணிகளது "வாழ விடுங்கள்" என்னும் நாடகமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (124)

## குடும்பஸ்தரைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் தோட்டத்துக்கு சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரை வெள்ளைவானில் வந்த நபர்கள் சிலர் கடத்திச்சென்றதாக அவரது மகன் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நீர்வேலி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த 54 வயதான க.தாமோதிரம்பிள்ளை என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இவர் கடந்த 26 ஆம் திகதி காலை 10 மணியளவில் நீர்வேலிப் பகுதியில் அமைந்துள்ள தனது தோட்டத்துக்கு சென்றுகொண்டிருந்த வேளை வெள்ளைவானில் வந்த சில நபர்கள் கடத்திச்சென்றதாக கூறப்பட்டது.

கடத்தப்பட்டவர் இதுவரை எங்குள்ளார் எனவும், அவர் தொடர்பான தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும், அவரது மகன் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

## நடைபாதை கடைகளை அகற்ற நடவடிக்கை!

யாழ். நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள அனைத்து நடைபாதைக் கடைகளும் உடனடியாக அகற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபையினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட நீதிபதியின் பணிப்பின் பேரில் இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது. யாழ். நகரில் இந்த நடைபாதை வியாபாரிகளால் பஸ் பயணிகள், பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் போன்றோர் சிரமங்களுக்குள்ளாவதாலும், மழை காலங்களில் நெருக்கடிகள் ஏற்படுவதாலும் இந்த நடைபாதைக் கடைகள் நிரந்தரமாக அகற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளரைக் கேட்டபோது - ஏற்கனவே நடைபாதை வியாபாரிகளுக்கென ஒதுக்கிய இடங்களில் தான் அவர்கள் வியாபாரம் செய்ய வேண்டும், அங்கும் இடம் இல்லாதவிடத்து இனிவரும் காலங்களில் அவர்களுக்கு இடம் ஒதுக்கித்தரப்படும்.

எனவே இன்று முதல் இந்த நடவடிக்கை இடம்பெறும் எனவும் இதில் பொலிஸாரும், யாழ். மாநகரசபை ஊழியர்களும் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அஞ்சல் பயிற்சி நிலையமொன்றை யாழ்ப்பாணத்தில் திறக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அஞ்சல் பயிற்சி நிலையமொன்றைத் திறக்குமாறும், அஞ்சல் அறிமுக அட்டைகளை வர்ணப் புகைப்படங்களுடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், இலங்கை தபால் தந்தி தொலைத்தொடர்பு சேவைச் சங்க கிளைச்சங்கம் தாய்ச்சங்கத்திடம் கேட்டுள்ளது.

தபால் தந்தி தொலைத்தொடர்பு சேவை தாய்ச்சங்க தலைவர் எஸ்.விவேகானந்தலிங்கம், செயலாளர் சந்திரசேகர பண்டார உட்பட 12 பேரைக் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து கிளைச்சங்க உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே, கிளைச் சங்க உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையில் தொகுதி ஆ தரம் 1 அ தரப்பதவிகள் பெருமளவில் வெற்றிடமாக இருப்பதாகவும், தேசிய சேமிப்பு வங்கியால் அவர்களின் கடமைகளை மேற்கொள்வதற்காக அஞ்சல் திணைக்கள உயரதிகாரிகள் தரத்தில் சில விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது.

ஆனால், யாழ்.மாவட்ட அதிகாரிகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதுமில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

செய்திக்கட்டுரை

- எஸ்.ஜெயா

# சில்லறைத் தட்டுப்பாடு 'சில்லறை'ப் பிரச்சினையா...?

ஊடகங்கள் வாயிலாக சில பிரச்சினைகள் திரும்பத் திரும்ப ஒலித்த வண்ணமே இருக்கின்றன என்றால், அந்தப் பிரச்சினையானது அந்தச் சமூகத்தை ஆழமாகப் பாதித்துவிட்டது. அல்லது மனதில் பதிந்துவிட்டது என்பது மட்டுமல்ல, அவை இன்னும் களையப்படவில்லை என்பதே பொருளாகும். இத்தகைய பிரச்சினைகளில் ஒன்றே சில்லறை நாணயப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையானது வணிக முறையிலான கொடுக்கல் வாங்கல்களில் பல்வேறு மட்டங்களில் படிந்துள்ளதே இன்றைய நிலையாகும்.

யாழ்.குடாநாட்டை எடுத்துக் கொண்டால், இந்தப் பிரச்சினையானது, யாழ்.குடாநாடு வெளித்தொடர்புகள் அற்று, தனக்குள் தான் வர்த்தக வாழ்வினை மட்டுமல்லாது, கொடிய போரியல் முறைச் சிக்கலுக்குள் ஆட்பட்டிருந்தபோது உருவானது. ஆனால் அன்றைய நிலையில், வங்கிச் செயற்பாடுகள் செயலற்றுக் காணப்பட்டதோடு, வெளியூர் பணவரவுகளும் முடக்கம் கண்டிருந்தமையால், சில்லறைத் தட்டுப்பாடு ஒரு நியாயப்பாடான முறையாக கருதப்பட்டது.

ஆனால், இன்றைய நிலையில் யாழ். குடாநாடு A 9 பாதை திறப்பின்பின், கொழும்புடன் மட்டுமல்லாது சர்வதேசத்துடன்கூட தொடர்பு வைத்திருக்கும் நிலையில், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள சில்லறைப் பிரச்சினையானது எவராலும், எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகவே காணமுடிகின்றது. இத்தகைய செயற்கைத் தட்டுப்பாட்டுக்கு யாது காரணம்? என்பதே இன்று மக்களது வினாவாகும்.

அங்காடிகள், கடைகள், கூட்டுறவு நிறுவனங்கள் என எங்கு சென்றாலும் சில்லறையில்லை என்பதும் மீதிப் பணத்துக்கு, பாவனைக்கு உதவாத அல்லது அதிகம் விலைப்படாத அல்லது உபயோகப்படாத பொருட்களைத் திணிப்பதனைக் காணடிமுடிகின்றது. இது மக்களின் சேமிப்புப் பழக்கத்தைக் குறைப்பதோடு, அவர்களின் நுகர்வுச் செலவை அதிகரித்து விடுகின்றன. இங்கு ஒரு நுகர்வோர் தான் விரும்பும் பொருளைக் கொள்வனவு செய்யவே உரிமையுண்டு என்பதையும், நிரம்பலாளனால் திணிக்கப்படும் பொருளைக் கொள்வனவு செய்யவேண்டியதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அப்படி வில்லங்கமாக திணிக்கப்பட்டால், அது நுகர்வோரின் உரிமையை மீறும் செயலாகும். இதற்கு நுவர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும். ஏனெனில்,

ஒரு நுகர்வோன் தனக்குத் தேவையான பொருள், சேவைகளைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குப் பதிலீடாக பணத்தைச் செலுத்தத் தயாராக இருக்கின்றான். இதேபோல் விற்பனையாளனும் தனது பொருள், சேவைகளை நுகர்வோனுக்கு விற்றுவிட்டு அதற்கு மாற்றீடாக பணத்தைப் பெறத் தயாராக இருப்பதால், மீதி சில்லறையைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு விற்பனையாளனிடமே உண்டு.

அவ்வாறு இல்லாது, மீதிப் பணத்துக்கு சில்லறை இல்லை எனக் காரணம் காட்டி, தேவையற்ற அல்லது நுகர்வோனுக்கு விருப்பமற்ற பொருட்கள் திணிக்கப்படுமாக இருந்தால், அது நுகர்வோனின் சிறப்புரிமையை மீறும் செயலாகும்.

இவ்வாறு திணிக்கப்படுவதால் நுகர்வோனது குடும்பப் பொருளாதாரத்தில் அவனது ஒருநாள் செலவு வலுவுக்குக் கூடிய கொள்வனவு நிகழ்வதால், அவனது குடும்பப் பொருளாதாரத்தில் 'வீக்க வலு விளைவுகள் ' உருவாகி விடுகின்றன.

இத்தகைய விளைவுகளின் தாக்கமானது, மத்திய தர அல்லது கீழ்த்தட்டு மக்களையே வெகுவாகப் பாதிப்பதோடு வெளிப்படையாகவும் தெரிகின்றது. உதாரணத்துக்கு பேரூந்துப் பிரயாணத்தை எடுத்துக் கொண்டால்,

கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 17 ரூபா அறவிடப்படுகின்றது. இங்கு 17 ரூபா சில்லறையாகக் கொடுத்தாலன்றி ஒருவர் 20 ரூபா கொடுத்தால் சில்லறை இல்லையென மீதி கிடைப்பதில்லை. அப்படியாயின் நாளாந்தம் கல்லூரிகளுக்கு அல்லது வேலைக்குச் செல்லும் ஒருவர் மாதம் ஒன்றுக்கு (30X3) 90 ரூபா இழக்க நேரிடுகிறது.

இந்தத் தொகையானது அவர் பெறும் உரிய சேவைக்கு அல்லது மேலதிகமாக செலுத்தப்படுவதால், கணக்குக் காட்டப்படாத கறுப்புப் பணமாக மாறுவதோடு, நுகர்வோனும் சுரண்டல் வர்த்தகத்துக்கு ஆட்படுகின்றான். இப்படி எத்தனையோ பயணிகள் பாதிக்கப்படலாம்.

இத்தகைய பொருளாதார விளைவுகளும், அதன் அறிக்கையும் சமூகமட்டத்தில் போதியளவு இன்மையாலேயே இத்தகைய குற்றச் செயல்கள் மீண்டும், மீண்டும் எழுகின்றன. இதில் ஏனையோருக்கு ஒரு கூற்றுப்படி நாட்டில் தாராளமான சில்லறைப் பயன்பாடு புழக்கத்தில் விடப்பட்டுள்ளது.

அப்படியானால் இத்தகைய பிரச்சினை தோன்ற யாது காரணம் என்பதே இன்றைய தேடலாகும். வணிக நிறுவனங்கள் சில்லறைத் தட்டுப்பாட்டைச் செயற்கையாக உருவாக்குகின்றன என்பதே பெரும்பாலானோரின் வாதமாகும். ஏனெனில் இவர்கள் இதனை ஒரு வியாபார உத்தியாகக் கருதுகின்றனர். இதன்மூலம் அதிக பொருட்களை விற்றல் அல்லது பயன்பாடு குறைந்த அல்லது நுகர்வு மட்டம் குறைந்த பொருட்களை மக்கள் உபயோகத்துக்கு விடல் என்பதாக அமைகின்றது.

இதேபோன்றே பேரூந்துப் பயணத்தின் போது - பஸ் நடத்துனர்கள், எல்லோரிடமும் சில்லறையாகப் பெற்றுக் கொள்ள முனைகின்றார். எனினும் மீதி கொடுக்கச் சில்லறை இல்லை என தாள் நாணயத்தைக் காட்டுவதாக, பயணிகள் குறைபட்டுக் கொள்கின்றனர். இது ஒரு திட்டமிட்ட

**ஒரு நுகர்வோன் தனக்குத் தேவையான பொருள், சேவைகளைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குப் பதிலீடாக பணத் தைச் செலுத்தத் தயாராக இருக்கின்றான். இதேபோல் விற்பனையாளனும் தனது பொருள், சேவைகளை நுகர்வோனுக்கு விற்றுவிட்டு அதற்கு மாற்றீடாக பணத்தைப் பெறத் தயாராக இருப்பதால், மீதி சில்லறை யைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு விற்பனையாளனிடமே உண்டு.**

கேள்வி எழலாம். ஒவ்வொரு நாளும் தாள் நாணயங்களைக் கொண்டு செல்லாமல், தேவையான பணத்தை அளவாக மாற்றி சில்லறையாகக் கொண்டு செல்லலாம் தானே என்று?

இது நியாயமான ஒருகேள்வி. ஆனால், சில்லறை நாணயங்களைக் கொடுக்க வேண்டிய வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் என்பன பொது மக்களிடம் அறவிடும் தொகையைச் சில்லறையாகவே கோருகின்றபோது, அவர்கள் யாரிடத்தில் சில்லறைப் பணத்தை மாற்றிக்கொள்வது? மக்களுக்குச் சில்லறையைப் புழக்கத்தில் விட வேண்டியவர்களே சில்லறையைக் கோரினால் தாம் என்ன செய்வது என்கின்றனர் மக்கள்.

அப்படியாயின் சில்லறைக்காக மக்கள் நேரடியாக மத்தியவங்கியை அணுகமுடியுமா? இது சட்டரீதியாக முடியாததொன்றால்லவா? ஆனால், மத்திய வங்கிக் சுரண்டல் நடவடிக்கை என்றே கருதமுடிகின்றது. (அடிப் பொக்கற்றுக்குள் சில்லறையை அமிழ்த்திவிட்டு கையில் தாளைக் காட்டி பயணிகளை ஏமாற்றுவது)

இன்று உலகமயமாக்கல் என்ற கோட்பாட்டின் கீழ் உலக நாடுகள் முன்னேற்றகரமான பணக் கொள்கையைக் கையாளுகின்றபோது, நாம் சில்லறைப் பிரச்சினைக்குள்ளாகிச் சிக்கித் தவிப்பது எமது சமூகப் பாதுகாப்பின்மையும், நுகர்வோர் விழிப்புணர்வின்மையையுமே எடுத்துக் காட்டுகின்றது.

இதன் மூலம் அதிகமாகப் பாதிக்கப்படுவது கீழ்த்தட்டு மக்களே என்பது வேதனைக்குரியதாகும். எனவே நுகர்வோர் தமது உரிமையைப் பெற எப்போது விழிப்படைகிறார்களோ, போராடுகிறார்களோ அப்போதுதான் இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பின்தள்ள முடியும். ✧

ஆய்வு

# சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்; 'நேரி' அறிக்கை எழுப்பும் கேள்விகள்...

## சேது சமுத்திர கால்வாய் அமையும் பகுதி




*(நேற்றைய தொடர்ச்சி....)*

இந்த விபரங்களை அரசாங்கத்திடம் கேட்கும் போதுதான் கலாட்டா நடக்கிறது. இதன்பின் உள்ள அரசியலைச் சற்றே ஊன்றிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தத் திட்டத்தால் முதலில் பாதிக்கப்படப் போகிறவர்கள் மீனவர்கள்தான். ஆனால், மீனவர்கள் தமிழகத்தில் ஒரு அரசியல் சக்தியாக இல்லை. அதற்கே உரிய பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்களை ஒரு ஓட்டு வங்கியாகப் பார்க்கும் அரசியல் கட்சிகளுக்கு அவர்களை எவ்வாறு கையாள்வது என்பது தெரியும். அதனால் அவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. கடலோர மீனவர் தொகுதி என்ற கோரிக்கையை அவர்கள் காதால் கேட்பது கூட இல்லை.

இந்தத் திட்டத்தால் பலன் பெறப்போகிறவர்கள் தமிழர்கள் இல்லை. அதாவது என்னைப் போன்ற அன்றாடங்காய்ச்சி தமிழர்கள் இல்லை. மாறாக, தென்மாவட்ட முதலாளிகள். அதிலும், தூத்துக்குடி போன்ற துறைமுகங் கள் வளர்ச்சி பெற்றால் வளர, மேலும் முன்னேற வாய்ப்புள்ள முதலாளிகள் இதனால் பயன்பெறுவார்கள்.

சேதுசமுத்திரக் கால்வாய் வந்தால் வேலை வாய்ப்புப் பெருகும் என்பதெல்லாம் காதில் பூச்சுற்றும் வேலை. நான் முன்னமேயே சொன்னபடி வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி என்பது இன்றைய உலகமயக் கொள்கையின் தாரகமந்திரம்.

சில கப்பல் கம்பெனி முதலாளிகளுக்கு, அதாவது மத்திய அமைச்சரான ரி.ஆர்.பாலு போன்ற கப்பல் கம்பெனி முதலாளிகளுக்கு ஆதாயம். மன்னார் வளைகுடா மீன் வளத்தை அள்ளத் துடிக்கும் பன்னாட்டு மீன்பிடி கம்பெனிகளின் பெரிய மீன்பிடி படகுகள், கப்பல்கள் கால்வாய் வழியே உள்ளே வரும் என்பதால் அவர்களுக்கும் ஆதாயம்.

இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் போதும் பின்னர் தொடர்ந்தும் செய்ய வேண்டிய மண் அள்ளும் வேலையை குத்தகை எடுக்கும் பன்னாட்டு இந்தியநாட்டு மண் அள்ளும் கப்பல் கம்பெனி முதலாளிகளுக்கு ஆதாயம்.

திட்டத்தை அமுல்படுத்தும் தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழக தலைவர் ரகுபதி போன்ற அதிகார வர்க்கத்தினருக்கு ஆதாயம். (எப்படி என்று சொல்லவேண்டுமா என்ன?)

இந்தத் திட்டத்தைக் கொண்டுவரும் அரசியல்வாதிகளுக்கும் ஆதாயம். எதற்காக கப்பல் துறையை கேட்டு தி.மு.க ஒற்றைக் காலில் நின்றது என்கிறீர்கள்? நான் சொல்வது புரியவில்லை என்றால், அருகேயுள்ள TASMAC கடைக்குச் சென்று எந்தக் கம்பெனி சரக்குகள் அதிகமாக விற்பனை ஆகும்படி பார்த்துக்கொள்ளப்படுகிறது என்று கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். அந்தக் கம்பெனிகள் யாருக்குச் சொந்தம் என்று பத்திரிகைகள் எழுதின. இந்தத் திட்டத்தை யார் கொண்டு வந்தது என்று உங்களுக்கே தெரியும். சாராயக் கடைக்கே இப்படியென்றால், 2000 கோடி (இப்போதைக்குச் சொல்லப்பட்டிருப்பது மட்டும்) திட்டத்தை ஏன் கொண்டு வருகிறார்கள் என்று மறுபடியும் சொல்ல வேண்டுமா என்ன?

நஷ்டம்? மீனவர்களுக்கு. உங்களுக்கு... எனக்கு.

இவற்றை விட முக்கியமான வேறு சில செய்திகளையும் நாம் பார்க்க வேண்டும். இராமேஸ்வரத்தை கடற்படைத் தளமாக்குவது தேசபாதுகாப்புக்கு அவசியம் என்று சொல்கிறார்கள்.

தேசம் என்றால், அதில் உங்களுக்கும் எனக்கும் மீனவர்களுக்கும் பெரிய முக்கியத்துவம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கூடங்குள அணு மின் நிலையத்தைப் பாதுகாத்தாக வேண்டும். இந்துமகா சமுத்திரத்தில் நமது கப்பல் படையில் ஆதிக்கத்தை விரிவுபடுத்த வேண்டும். கல்பாக்கம் துவங்கி, அருமணல் கிடைக்கும் கன்னியாகுமரி வரை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ராணுவ தொழில் அமைப்புகளைப் பாதுகாத்தாக வேண்டும்.

ஆனால், ஆள்பவர்களைப் போன்ற முட்டாள்கள் என்றும் இருந்ததில்லை. அவர்கள் நுனி மரத்தில் இருந்துகொண்டு அடிமரத்தை வெட்டுவார்கள். மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதால், சூழல் பேரழிவை ஏற்படுத்துவதால் திட்டத்தின் அமுலாக்கத்தை ஒட்டியும், முன்னேயும் பின்னேயும் சேது சமுத்திரம் வெட்டப்படுவது கடும் சமூகப் பதட்டத்தை ஏற்படுத்தும்.

சென்னை கடற்கரையை அழகுபடுத்தி பன்னாட்டு நாய்களுக்கு, (மன்னிக்கவும், கம்பெனிகளுக்கு) அளிப்பது, நவீன கட்டுமான முதலாளிகளுக்கு அளிப்பது என்ற எம்.ஜி.ஆர் காலத்தில் துவங்கிய முயற்சியை இன்றுவரையும் கூட யாராலும் நடைமுறைபடுத்த முடியவில்லை. அன்று துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான மீனவர்கள் ஒரு செய்தியைச் சொல்லி சென்றிருக்கிறார்கள்.

மீனவர்களின் அன்றாட வாழ்வு கடலோடு மட்டும் அல்ல, மரணத்தோடும்தான். வாழ்வதற்காக சாகத்துணிந்தவர்கள் அவர்கள். ஆட்சியாளர்கள் இந்த செய்தியைப் புரிந்து கொள்ளும்போது, அது காலம் கடந்த புரிதலாக இருக்கும்.

நன்றி - திண்ணை

(முற்றும்)

# இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்!



(டெல்அவில்)

காஸாப்பகுதியில் இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் இரண்டு பலஸ்தீன ஆயுதபாணிகள் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

இதில் முதலாவது தாக்குதல் காஸாப்பகுதியிலுள்ள ஜபாலியா அகதிமுகாம் பகுதியில் இடம்பெற்றது. இங்கு இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினரான தபீக் அலி சராபி (வயது-22) என்பவர் கொல்லப்பட்டார்.

இரண்டாவது தாக்குதல் இதே பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டது இஸ்ரேல் படையினர் மீது பலஸ்தீன இளைஞர்கள் கற்களை வீசித் தாக்குதலை நடத்திய வேளை படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் இதில் இரண்டு பலஸ்தீன இளைஞர்கள கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது தாக்குதல் காஸாவின் மேற்குக்கரை நகரான நப்லஸில் இடம் பெற்றது. இதில் அல்.அக்ஷா மார்ட்டியஸ் பிரிகேட்டைச் சேர்ந்த மஜ்டி கலீபா என்பவர் கொல்லப்பட்டார். இதேவேளை இஸ்ரேலிய தாங்கிகள் மற்றும் புல்டோசர்கள் என்பன காஸாவின் வடக்குப் பகுதிக்குள் நேற்று முக்தினமிரவு பிரவேசித்துள்ளதாக காஸாவிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் அலன் ஜோன்ஸ்ரன் தெரிவித்தார்.

இதனிடையே இஸ்ரேலின் சிடறொட் மாகாணம்மீது பலஸ்தீன ஆயுததாரிகள் ஐந்திற்கும் மேற்பட்ட றொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும், ஆனாலும் அங்கு எவவித சேதங்களும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. காஸாப்குதியில் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் எவ்வித தகவலையும் வழங்கவில்லை.

ஆனாலும் இரண்டு பலஸ்தீனர்கள் குண்டை நிலத்தில் புதைத்துக்கொண்டிருந்தவேளை படையினர் தாக்குதலை மேற்கொண்டதாக இஸ்ரேல் இராணுவத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை 12 தொடக்கம் 21 வயதிற்கு இடைப்பட்ட பலஸ்தீனர்கள் இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் காயமடைந்ததாக பலஸ்தீன அதிகாரிகள், ஏ.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தனர்.

நப்லஸில் கொல்லப்பட்ட இஸ்லாமிய ஆயுததாரி படையினரைக் கண்டு ஓடியதாகவும இதன்போது படையினர் அவரை நிற்குமாறு கோரியபோதும் அவர் அதனை ஏற்க மறுத்ததாலேயே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

# 301 பயணிகள் சென்ற விமானத்தில் குண்டுப்புரளி

கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரிலிருந்து அமெரிக்காவின் நியூ யோர்க் நகருக்கு ஒரு விமானம் புறப்பட்டுச் சென்றது. அந்த விமானத்தில் 301 பயணிகள் இருந்தனர். நடுவானில் அந்த விமானம் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக விமான நிலைய அதிகாரிகளுக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு வந்தது.

அந்த விமானத்தைச் செலுத்திய விமானிக்கும் இந்தத் தகவல் உடனடியாக அறிவிக்கப்பட்டது. நடுவானிலேயே 301 பயணிகளும் அலறினார்க்ள். அந்த விமானத்தை விமானி அவசரம் அவசரமாக லண்டனில் உள்ள விமான நிலையத்தில் தரையிறக்கினார். அலறியடித்தபடி பயணிகள் அனைவரும் வெளியே குதித்தனர். விமானம் முழுவதும் துருவித் துருவிச் சோதனை போடப்பட்டது.

ஆனால், வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. இது பின்னர் வதந்தி எனத் தெரியவந்தது. இந்த வெடிகுண்டுப் புரளி காரணமாக விமானம் 4 மணிநேரம் தாமதமாகவே மீண்டும் நியூயோர்க் புறப்பட்டுச் சென்றது.

உலக நோக்கு

# தாய்லாந்தில் மீண்டும் பறவைக் காய்ச்சல்!

தாய்லாந்தில் பறவைக்காய்ச்சல் நோயால் ஒரு பெண் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

நோய் தடுப்புத்துறை அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர். தாய்லாந்தில் கடந்த ஆண்டு இதே நோய்தாக்கி மொத்தம் 8 பேர் இறந்தனர். கடந்த ஜூலையில் மீண்டும் இதேநோய் தாக்கியது. கடந்த மாதம் 18 வயது இளைஞர் உட்பட 9 பேர் இறந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத்திற்கு எதிரான போரில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாம்!

## ஜோர்ஜ் புஷ் தெரிவிப்பு



(வொஷிங்ரன்)

அல்கொய்டா தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் பலர் பிடிபட்டுவருவதால் தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டுள்ள போர் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அவர் அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த தேர்தல் பிரசாரத்தின்போது. இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது அமெரிக்க பத்திரிகை நிருபர் டானியல் பியர்லை கொடூரமானமுறையில் கொலைசெய்த அம்ஜத்பரூக்கி - பாகிஸதானில் பொலிஸாருடன் நடந்த சண்டையில் ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்டார்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைக் கொலைசெய்ய அவர் மீது இரண்டு முறை தாக்குதல் நடத்தியவர். அல்கொய்டா தீவிரவாதிகளை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு அமெரிக்கா அதன் நேச நாடுகளுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது

அந்த இயக்கத்தின் முக்கிய புள்ளிகளில் 75 சதவீதமானோர் பிடிபட்டும், கொல்லப்பட்டும் உள்ளார்கள் எனவும் புஷ் மேலும் தெரிவித்தார்.

# ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட இத்தாலிய பெண்கள் விடுதலை



ஈராக்கில் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை இந்தமாதம் 7 ஆம் திகதி கடத்தப்பட்ட இரண்டு இத்தாலியப் பெண்கள் மற்றும் எகிப்திய ஓயில் கம்பனியொன்றில் பணிபுரிந்த நால்வரென மொத்தம் ஆறுபேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். இவவாறு விடுவிக்கப்பட்ட இரண்டு இத்தாலியப் பெண்களும், இராணுவ விமான மூலம் ரோமிற்குச் சென்றடைநதனர். அங்கு அவர்களுக்கு மிகப்பெரியளவில் வரவேற்பு அளிக்கப்படடது.

இவர்களின் விடுதலைக்காக கடத்தற்காரர்களுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டதாக இத்தாலியத் தகவல்கள் தெரிவித்தன. விடுவிக்கப்பட்ட பெண்களில் ஒருவரான ரொற்றா தெரிவித்ததாவது -

கடத்தப்பட்ட நாளிலிருந்து விடுதலையாகும் நாள்வரை நாம் நன்றாக உபசரிககப்பட்டோம். நாம் கொல்லப்பட்டு விடுவோம் என்ற அச்சத்துடனேயே வாழ்ந்துவந்தோம்.

இத்துடன் கடத்தப்பட்ட நாளிலிருந்து எமது கண்கள் கட்டப்பட்டே இருந்தன. ஆனாலும் எம்மிருவரையும் கடத்திய நாள்முதல் ஒரே இடத்திலேயே வைத்திருந்தனர். எமது கணகள் கட்டப்பட்டிருந்ததனால் கடத்தற்காரர்களை எம்மால் பார்க்க முடியாமல்போய்விட்டது எனத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள்மூலம் இராணுவ விமானத்தில் ரோமிற்குச் சென்றடைந்தனர். இதேவேளை கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட பிரான்ஸ் பத்திரிகையாளர்கள் இருவர் மற்றும் பிரிட்டன் பிரஜை ஒருவரென மூவர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

பிரான்ஸ் பத்திரிகையாளர்களின் விடுதலை தொடர்பாக கிளர்ச்சிவாதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவரும் பிலிப்பு பிறெட் - அல் ஜசீராவிற்குத் தெரிவிக்கையில் - இரண்டு பத்திரிகையாளர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவர். இந்த இரண்டு பத்திரிகையாளர்களையும் தான் கண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிச்சைக்காரர்களுக்கு சீனாவில் தடையில்லை

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் சுற்றுலா மையங்களில் பிச்சைக்காரர்களுக்குத் தடைவிதிக்கும் எண்ணம் இல்லையென்று அந்த நகர சபை அறிவித்துள்ளது.

பீஜிங் நகர ஆலோசனைக்குழு பிச்சைக்காரர்களுக்குத் தடை விதிக்கவேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது. இதுபற்றி விவாதம் நடத்தியபோது பிச்சையெடுப்பதைத் தடைசெய்யும் சட்டம் ஏதும் இல்லையென்பதால், பிச்சைக்காரர்களுக்குத் தடைவிதிக்கப்படமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது.

பிச்சைக்காரர்களுக்கு நிவாரண உதவியளிக்க அரசு முன்வந்தபோதிலும், அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். நிவாரண உதவியைவிட பிச்சையெடுப்பதன் மூலம் அதிகம் கிடைப்பதாக பிச்சைககாரர்கள் கூறினர்.

தடைசெய்வதில்லை என்ற போதலும் அதிகரித்துவரும் பிச்சைக்காரர்கள் பரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பதுபற்றி நகரசபை நிர்வாகம் ஆலோசித்துவருகிறது.

# ஜப்பான் விமானப் படையின் ஐம்பதாவது ஆண்டு விழா!



(ரோக்கியோ)

ஜப்பானின் விமானப்படை தனது 50 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிவருகிறது. இந்தப் பொன்விழா நிகழ்ச்சியினையொட்டி போர் விமானங்களின் கண்காட்சியும், சாகச நிகழ்ச்சியும் அங்குள்ள ஹயாகுரி விமானப்படைத் தளத்தில் நடைபெற்றது. இதில் எவ்.15 ரக விமானங்கள் சாகச நிகழ்ச்சிக்குத் தயாராக நிற்கும் காட்சி.

## அமெரிக்க கப்பல் மீதான தாக்குதல்

# யெமன் நீதிமன்றினால் இருவருக்கு மரணதண்டனை தீர்ப்பு வழுங்கப்பட்டது





யெமனின் ஏடன் துறைமுகத்தில் 2000 ஆம் ஆண்டு தரித்துநின்ற அமெரிக்காவின் யூ.எஸ்.எஸ்.கோல் என்ற கப்பலைத் தாக்கி, 17 அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப் படுவதற்கும் மற்றும் 40 பேர் காயமடையவும் காரணமாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களுக்கு யெமன் நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பு வழங்கியது.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் தாக்குதலுக்குத் தலைமைதாங்கியவர் எனக் கருதப்படுபவரான அப்ட் அல் - ரகீம் அல் - நசீரி மற்றும் ஜமால மொகமட் அல் - பட்டாவி ஆகிய இருவருக்குமே இந்த மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்துடன் இந்தத் தாக்குதலுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட மேலும் நான்கு பேருக்கு பத்துவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏடன்துறைமுகத்தில் இந்தக் கப்பல் நின்றவேளை சிறிய படகொன்றில் வெடிமருந்துடன் சென்ற இருவர் குறித்த கப்பலைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டவர்களில் ஒருவரான நஸ்ரி சவுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் இவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸினால் கைதுசெய்யப்பட்டு 2002 ஒக்ரோபரில் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்டார். இதன்பின் அமெரிக்காவினால் இவர் இனந்தெரியாத இடமொன்றில் சிறைவைக்கப்பட்டிந்தார். இதனால் இவரை யெமன் நீதிமன்றுக்கு அழைத்துச்செல்லவில்லை.

1998 ஆம் ஆண்டு கென்யா மற்றும் தன்சானியாவில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டதற்கும் இவரே மூலகாரணமென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன் மரணதண்டனைக் கைதியான பட்டாவி கதறி அழுததுடன், இது நீதியற்ற ஒரு தர்ப்பு, அமெரிக்காவிற்குச் சாதகமான தீர்ப்பு எனக் கோஷமிட்டார். இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யவுள்ளதாக இவரது சகோதரர் தெரிவித்தார்.

இதில் பாத் - அல் - குயாசா என்பவர் இந்தத் தாக்குதலைப் படம் பிடித்தார் என்ற காரணத்திற்காகப் பத்துவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு நிதியுதவி புரிந்தாரெனத் தெரிவித்து மமூம் முசா என்பவருக்கு எட்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

அத்துடன் தற்கொலையாளிகள் தொடர்பான தகவல்களைத் தவறாகத் தெரிவித்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் அலி முகமட் சாலே மற்றும் முராட் அல் சிரார்ரி ஆகிய இருவருக்கும் ஐந்துவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவு போட்டிகளில் பரிசு பெற்றோர்!

'நமது ஈழநாடு' இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றோர் பெயர் விபரம் -

**சிறுகதை**

முதலாம் பரிசு: 'நெருங்கும் முடிவு காலம்' (கார்த்திகா பாலசுந்தரம் - கரவெட்டி மேற்கு, கரவெட்டி.)

இரண்டாம் பரிசு: 'பற்று' (ஆனந்தராணி நாகேந்திரன் - மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி)

மூன்றாம் பரிசு: 'சிங்கள நீதி' (கருணை ரவி - வேலன் பதிப்பகம், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.)

**கவிதை**

முதலாம் பரிசு: 'வந்ததும் வராததும்' (ச.முகுந்தன் - முகவரி குறிப்பிடப்படவில்லை.)

இரண்டாம் பரிசு: 'ஏதிலியின் வலி' (க.சுசீதரன் - கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.)

மூன்றாம் பரிசு: 'ஒரு காத்திருப் பின் ரணம்' (சி.கலைப்பிரியா - முரசு மோட்டை, பரந்தன்.)

**கையெழுத்து சஞ்சிகை போட்டி**

**வெளிப்பிரிவு -**

முதல் பரிசு: 'கலைப்பூங்கா' (மேனகா சிவபாலன் - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி).

இரண்டாம் பரிசு: 'சோலை' (சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம்).

மூன்றாம் பரிசு: 'கலைக்கலசம்' (மாலாதேவி மதிவதனன் - மங்குனியன் வளவு, அளவெட்டி மத்தி.)

ஆறுதல் பரிசு: 'ஆரம்' (ஆனந்தராணி நாகேந்திரம் - நெல்லியடி - கரவெட்டி).

**பாடசாலை மாணவர்களுக்கானது-**

முதலாம் பரிசு: 'இளஞ்சுடர்' (ச. நேசராஜன் - யா/.வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை)

இரண்டாம் பரிசு: 'மனிதம்' (கிளி நொச்சி பரந்தன் மகாவித்தியாலயம்).

மூன்றாம் பரிசு: 'இளஞ்சூரியன்' நா.நந்தகோபன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

ஆறுதல் பரிசு: 'எழுந்திட்டேன் தமிழா எழுந்திட்டேன்' (ப.பத்மன் - யா.'. மல்லாகம் மகாவித்தியாலயம்).

**புகைப்படப் பிரிவு**

முதலாம் பரிசு: உதயபாரதிலிங் கம் தமிழ்மாறன் (7 ஆம் வட்டாரம், நயினாதீவு).

இரண்டாம் பரிசு: ச.ஞானசூரியா, 12/3, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்).

மூன்றாம் பரிசு: ஆ.தியாகலிங் கம் (பயிரிக்கூடல், காரைநகர்)

பரிசு பெற்றோர் அனைவரும் எதிர் வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு 'நமது ஈழநாடு' அலுவலகத்துக்கு வருகை தரவும்.

## குற்றவியல் நடைமுறைச் சட்டம் தமிழீழ நீதித்துறையால் பிரகடனம்

(கிளிநொச்சி)

தமிழீழ நீதி நிர்வாகத் துறையினரால் புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தமிழீழ குற்றவியல் நடைமுறைச்சட்டமெனும் பேரில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தச் சட்டமானது நாளைமுதல் நடைமுறைக்கு வருமென்று தமிழீழ நீதி நிர்வாகத் துறை அறிவித்துள்ளது.

இந்தச் சட்டமானது விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத்துறையால் அறிமுகப்படுத்தப்படும் 18 ஆவது சட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டம் தமிழீழ குற்றச் சாட்டுக்களின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் எனவும்- தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனால கையொப்பமிடப்பட்டு வெளிவரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஏற்கனவே உள்ள 17 ஆவது சட்டக்கோவைகளின் பிரகாரமே தற்போது காவல்துறையினரும், தமிழீழ நீதிமன்றமும் வழக்குகளை விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கத் தூதுவரை...

சமாதானப் பேச்சு விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்றும், அவர்கள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையிலேயே அந்தப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் இலங்கை அரசை வலியுறுததும்படி கேட்டுக்கொள்ளப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், யோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பேச்சுக்கள்.....

திட்டம் முன்வைத்துள்ளோம்.

அவற்றை அரசு நிறைவேற்றத் தவறின் விரைவிலேயே வீதிக்கிறங்கிப் போராட்டங்களை நடத்தவுள்ளோம். இந்தப் போராட்டங்கள் தொடர்ச்சியாக அமையும்.

தற்போதைய நிலையில் நாம் அரசியல் லாபம் தேட முனையவில்லை. மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும். அதுவே எமது கோரிக்கை. ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் லாபம் தேடும் வகையில் செயற்பட்டு வருகிறது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் இரட்டைப் போக்கைக் கடைப்பிடிக்கிறது.

அரசாங்கத்தில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதனை நீக்குவதற்கு முதலில் அரசு சரியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதி கூறும் கருத்துக்கு முரணான கருத்துக்களையே ஜே.வி.பியினர் வெளியிட்டு வருகின்றனர்.

நாட்டில் இன்று உலகவங்கியின் திட்டங்களுக்கு முகம் கொடுத்து சமாதானத்தை முன்னெடுக்கக்கூடிய அரசாங்கம் ஒன்றே அவசியமானது. இந்த நிலையில் ஜனாதிபதிக்கோ எதிர்க்கட்சித் தலைவருக்கோ நாட்டை நெறிப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் யாழ்.செயலகம் முன் ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கிலுள்ள பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முல்லைத் தீவு, கிளிநொச்சி, அம்பாறை, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

அரசுக்கு எதிரான சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர்.

'அரசே இளைஞர்களின் வாழ்வை பாழடிக்காதே.'

'உடன் தீர்வின்றேல் போராட்டம் தொடரும்.'

'பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலையீட்டை உடன் நிறுத்து.'

ஆசிரிய நியமனத்துக்கு தகுதியுடைய எமக்கு உடன் நியமனம் வழங்கு.' போன்ற சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு காலை 11 மணியளவில் வந்த யாழ். மேலதிக அரச அதிபர் எஸ். சிவசுவாமி, சம்பந்தப்பட்ட[illegible] களுடன் கலந்துரையாடினார்.

ஜனாதிபதிக்கான மகஜர் [illegible] வடக்கு - கிழக்கு பகுதிநேர [illegible]கில ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ். ஞானகரன் மேலதிக அரச அதிபரிடம் கையளித்தார்.

## கொரியக் கப்பலில் வெடிவிபத்து: நான்கு மாலுமிகள் உயிரிழப்பு!

கொழும்புத் துறைமுகத்திலிருந்து சுமார் 400 கடல் மைல் தொலைவில் - சர்வதேசக் கடற்பரப்பில் கொரியக் கப்பலொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் நான்கு மாலுமிகள் உயிரிழந்தனர்.

சர்வதேசக் கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பலின் இயந்திர அறையில் இந்த வெடி விபத்து நேர்ந்ததாகத் தெரியவருகிறது. இந்தக் கப்பல் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு, சுவெஸ் கால்வாய் ஊடாக பயணத்தை மேற்கொள்ள விருநத சமயமே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பல் ஹொங்கொங் நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், இறந்தவர்களின் உடல்க[illegible] கொழும்புத் துறைமுகத்துக்கு எ[illegible] வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்க[illegible] கிறது. உயிரிழந்த நால்வரில் [illegible] வர் பிலிப்பைன்ஸ் நாட்டவர் என[illegible] இருவர் கொரிய நாட்டவர்கள் [illegible] றும் கூறப்படுகிறது.

கப்பலுக்குரியவர்கள் மற்றும் இற[illegible] தவர்களின் உறவினர்கள் வருகை[illegible] தந்ததும் மேலதிக விசாரணை நட[illegible] தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்ப[illegible] கிறது.

இந்தக் கப்பலில் ஏற்பட்ட குண்[illegible] வெடிப்பே விபத்துக்குக் காரணம் எனவும், இது குறித்து இலங்கைக் கடற்படையினர் விசாரணை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

## கிரான் துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி கிரானில் 19 வயது இளைஞரொருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபரால் சுடப்பட்டு காயமடைந்த நிலையில் மட்டக்களபபு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மஞ்சத்தொடுவாயைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விவேகானந்தராஜா என்ற இந்த இளைஞர் அவரது காதலியின் வீட்டில் தங்கியிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயிற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர் தனக்கும் எந்தவொரு ஆயுத அமைப்புக்கும் தொடர்புகள் இல்லை என்று பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறினார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வாழைச்சேனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவுடன் தொடர்புடையவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

## மாணவிகள் மூவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பாடசாலை அதிபருக்கு சிறை!

(வவுனியா)

வவுனியாவிலுள்ள சிங்களப் பாடசாலையொன்றின் அதிபர் மூன்று மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தினார் என்ற குற்றசாட்டு நிருபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு 6மாதகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நேற்று வவுனியா நீதிமன்றில் குறித்த அதிபர் ஆஜர்படுத்தப்பட்ட வேளை இவர் மீதான விசாரணையின்போது குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதனையடுத்து வவுனிய[illegible] மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செ[illegible]யன் இவருக்கு ஆறுமாத கடூழிய[illegible] சிறைத்தண்டனை விதித்துத் தீர்[illegible]பளித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மூன்று மாணவிகளுக்கும் தலா பத்தாயிர[illegible] ரூபா அதிபர் வழங்க வேண்டுமெனவும் அதனை அவர் செலுத்தத் தவறின் மேலும் மூன்று மாதம் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடுமெனவும் நீதிவான் தனது தீர்ப்பில் தெரிவித்தார். (03)

## சமாதானத்தின் எதிரியான.....

யன் கையொப்பங்களைத் திரட்டும் ஒருவார கால நடவடிக்கைகளை பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஹெல உறுமயவின் பிரதித்தலைவர் ஒமல்பே சோமரட்ண தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தக்கூடிய முயற்சியில் இறங்க வேண்டாமென அழுத்தம் கொடுக்கவே இந்தக் கையெழுத்து வேட்டை நடைபெறவுள்ளது.

நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வேயின் உதவி தேவையற்றது. அப்படி வெளி நாட்டு உதவி தேவைப்பட்டால், இந்தியாவின் உதவியைப் பெறுவது மட்டுமே சரியானது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நோர்வேக்கு எதிரான 5 மில்லியன் கையெழுத்துக்களைப் பெறுவதற்குத் தீர்மானித்துள்ள ஹெல உறுமயவினர் அதன்பிரதிகளை ஜனாதிப்தி, பிரதமர், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கை இனப்பிரச்சினை விடயங்களில் தலையிடும் பிரதான நாடுகளின் தலைவர்கள் மற்றும் இது தொடர்பான அனைவருக்கும் அனுப்பிவைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

30 நாட்கள் மிக உச்சக்கட்ட பிரசாரத்துடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் கையெழுத்து வேட்டையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சி உறுப்பினர்களின் கையெழுத்துக்களும் இடம்பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது.

## அதாவுல்லா...

எனத தெரிவிக்கப்படுகிறது.

அக்கரைப்பற்று - தியாவெட்டுவான் வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சர் ஏ.எம.அதாவுலலா மற்றும் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் நாட்டிவைக்க இருப்பது தொடர்பான சுவரொட்டிகளை குறிப்பிட்ட நபர் ஒட்டிக கொண்டிருந்தபோதே, இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரியவருகிறது. தேசிய முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களால் பண்டா குழுவைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் இவர் மீதான துப்பாக்கிப்பிரயோகத்துக்கு அரசியல் பின்னணியே காரணமென அந்தப் பிரதேச மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## சிங்கள...

வேட்டைத் துப்பாக்கி மூலம் இவர்கள் சுடப்பட்டுள்ளதால் இந்தக் கொலைக்கும் ஊர்காவற் படையினருக்கும் தொடர்புகள் இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

## நிராயுத...

நாட்டின் சகல பிரஜைகளுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். எனவே, கொழும்புப் பகுதியில் இடம பெறும் படுகொலைகளைக் கட்டுப் படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதால், அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பாடசாலை ஆசிரியர்கள் வேலைநிறுத்த முஸ்தீபு!

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் எந்தவித அக்கறையும் செலுத்தாததைக் கண்டித்தே இந்தப் போராட்டத்தை நட[illegible]துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 6ஆம் 7[illegible] திகதிகளில் நாடளாவிய ரீதி[illegible] ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போ[illegible]டத்தில் ஈடுபட்டு தமது எதிர்ப்[illegible] முதற்கட்டமாக வெளிக்காட்டவு[illegible] தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல:- 1652 திகதி:- 28.09.2004
வெற்றி இலக்கங்கள்
V 4 8 0 0 1 8
அடுத்த சூப்பர் பரிசு 316 லட்சத்துக்கு மேல் (927)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.